
ഭഗവദ്ഗീത

12

16-6-1935

N35.7.12
208728

ந்த ரூ. 3 Regd. No. M. 2419.



# மாத்வ மித்திரன்.

# THE MADHWA MITRAN.

EDITOR:
**Adyam Bhagavatha Ranganathachariar,**
**KUMBAKONAM.**

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

| Vol. 7. | யுவ ஸம்வத்ஸரம் | No. 12. |
|---|---|---|
| புஸ்தகம் 7. | ஜ்யேஷ்ட மாஸம், (பௌர்ணமி 16—6—35 பானுவாரம்.) | நெ. 12. |

| நெ. | பொருளடக்கம். | பக்கம். |
|---|---|---|
| 1. | தாத்பரிய நிர்ணயம். (ஸ்ரீமத்வாசாரியார்) | 353 |
| 2. | ஸ்ரீவாதிராஜஸ்வாமிகளின் சரித்திரம். | 357 |
| 3. | ஸ்ரீமத்வ விஜயம். (ஸ்ரீநாராயணபண்டிதாசாரியார்) | 360 |
| 4. | அப்பையதீக்ஷதரின் அதிக்ஷேபணைகளுக்கு கண்டனம். | 365 |
| 5. | ஆசாரமாலை. | 368 |
| 6. | மகாலட்சுமி. | 372 |
| 7. | விசேஷதினங்கள். | 375 |
| 8. | மாத்வமித்திரன் 5-வது வாலியம் பொருளடக்கம். | 376 |
| 9. | ,, 6-வது ,, ,, | 378 |
| 10 | ,, 7-வது ,, ,, | 380 |
| 11. | சந்தாதாரர்களுக்கு விக்ஞாபனம். | 382 |

ஆசிரியர்:— ஆத்யம் பாகவத ரங்காதாசாரியார், கும்பகோணம்.

## ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்.

**தபால் சார்ஜ் இனம்! ஒரே ஒரு பிரதிதான் பாக்கி**

முதலில் கிரயத்தை பூரா அனுப்புகிறவருக்குத்தான் Preference உண்டு. பிந்தி அனுப்பியவருக்கு கட்டாயம் கிடையாது. வியாபாரத்தில் ஒரே ஒரு பிரதிதான் பாக்கி. கும்பகோணம் பதிப்பு ஸம்பூர்ணஸப்தகாண்டம் வால்மீகி ராமாயணம். அழகிய காலிகோபயிண்டுள்ள 3-வாலியங்கள் பிரஸித்தமான கோவிந்தராஜீய வியாக்யானத்துடன் கடகம் தீர்த்தம் திலகம் முதலிய வியாக்யானங்களின் குறிப்புகளுடன்கூடியது. கேட்லாக் விலையைவிட மிகக்குறைவு. ரூ 24தான். அடியிற்கண்ட விலாஸத்துக்கு பணத்தை உடனே அனுப்பவும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸ விலாஸம், கும்பகோணம்.

### மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாஸமாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விராதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழி பெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன. ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள். இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும். எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும். பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியான்படி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்த ஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும். பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும் ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

**மாத்வமித்திரன் பழைய வாலியங்கள் வெகு சொற்பம்தானிருக்கின்றன. உடனே அவைகளைப்பெற முந்துங்கள்.**


1 - JUL 1935

ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹாயநம.

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्वतः भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

---

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

## ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம்

---

இருபத்தி இரண்டாவது அத்தியாயம்

(ஸ்ரீம. வே. பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழி பெயர்ப்பு.)

(காபிரைட், முன் 327-பக்கம் தொடர்ச்சி)

---

ப்ரதிக்ஞையை மீறியவன் தர்மபுத்திரன் என்னும் உலக அபவாதத்திற்கு பயந்து இருந்துவரும் என்னைப்பார்த்து, இந்த வார்த்தைகளுக்கு மேலே இன்னம் அதிகமாய் பேசாதே. நான் இவ்வாறு ப்ரதிக்ஞை செய்தும், ஹே பீமசேனா! என்னை இப்பொழுதே புறப்படு என்று சொன்னால் அதனால் கடுமையான வார்த்தையால் என்னை கஷ்டப்படுத்துகிறாய். பதின்மூன்று வருஷத்திற்கு பின் உன் வார்த்தையை நான் நடத்தாமலிருந்தால் நீ என்னை மீறவேண்டியது தான். சத்ருக்களை கொல்ல வேண்டும் தான். இப்பொழுது நிஷ்டூரமான வாக்யங்களைப் பேசி என்னை வருத்தப் படுத்தாதே. [மற்றொரு விதமாயும் இந்த 118 வது சுலோகத்திற்கு அர்த்தம் செய்யலாம்.] அல்லது ஹே பீமசேனா! த்யூத காலத்திலேயே உனக்கு இந்த என் ப்ரதிக்ஞை ஸம்மதமானதல்ல வென்று சொல்லி என்னை நீ மீறியிருக்க வேண்டும். சத்ருக்களைக் கொன்றிருக்க வேண்டும். அப்பொழுது சும்மா

இருந்து விட்டு இப்பொழுது நிஷ்டுரமான வாக்யங்களால் என்னை சங்கடப்படுத்த அருகனாய் ஆகாதே. மேலும் அஸ்திரக்ஞர்களான பீஷ்மத்ரோணாதிகளை யுத்தத்தில் நான் எப்படி தடுப்பது. அவர்கள் குருமார்களானதால் எங்களுக்கு பூஜார்ஹர்களாய் இருக்கின்றனர். பாஹு யுத்தத்தால் தடுக்கக் கூடியவர்களாயில்லை. ஹே பீமசேனா! நீ அஸ்திரங்களை அறிந்தவனாயினும் ஒருவரிடமும் அஸ்திரங்களை ப்ரயோகம் செய்யவில்லை. ஆகையால் அர்ஜுனன் அஸ்திரங்களை அறிந்துகொண்ட பிறகுதான் பதினான்காவது வருஷம் யுத்தத்திற்குச் செல்லவேண்டும். என்றிவ்வாறு தர்மபுத்திரரால் சொல்லப்பட்ட பீமசேனர் தர்மபுத்திரரின் சிநேகம் போய்விடுமோ வென்று பயந்து, தன் அபிப்பிராயத்திற்கு ஒத்ததான வார்த்தை கிடைத்தபிறகு ஒன்றையும் பதில் பேசாமல் சும்மா இருந்துவிட்டார். பீமசேனரின் அபிப்பிராயம்யாதென்றால் பதின்மூன்று வருஷம் ஆனபிறகு ராஜ்யம் ஸம்பாதிக்க யுத்தத்திற்கு செல்கிறேனென்று தர்மபுத்திரர் ப்ரதிக்ஞை செய்ய வேண்டும். அப்படி அவர் செய்யாவிடில் அவர் மிக்க கருணைவாய்ந்தவரானதால் சத்ருக்களால் பேத புத்தி அடைந்தவராய் யுத்தத்திற்கு செல்லமாட்டார் என்று தான். பீமசேனர் தன் இஷ்டப்படி தர்மபுத்திரரால் ப்ரதிக்ஞை செய்வித்து தன் காரியத்தை முடித்துக்கொண்ட பின், பீஷ்மாசாரியர் த்ரோணாசாரியார் கர்ணன் முதலியவர்களை எப்படி ஜயிப்பதென்று, தர்மபுத்திரர் ஆலோசித்து, பீமசேனர் குருமார்களை தடுக்கும் வேலையை எப்பொழுதும் விரும்புவதில்லை யாதலாலும் ஆபத்துகாலத்தில் தான் அவர்களை தடுக்கிறாரேயல்லாது சாதாரண காலத்தில் தடுப்பதில்லையாதலால், பீஷ்மாதிகளை அர்ஜுனன் மூலமாய்த்தான் தடுக்கச்செய்ய வேண்டுமென்றும் யோசித்தார்.

## அர்ஜுனன் பாசுபதாஸ்திரம் பெற்றது.

இவ்வாறு தர்மபுத்திரர் சிந்தையுடன் கூடியிருக்கிறாரென்று அறிந்து ஸர்வக்ஞராயும் ஸர்வ வல்லமை யுள்ளவராயுமிருக்கும் ஸ்ரீ வேதவியாஸர் அங்கு வந்து சேர்ந்தார். ஹே தர்மபுத்திரா! உனக்கு இந்த மந்திரத்தை உபதேசம் செய்கிறேன். இதை நீ அர்ஜுனனுக்கு உபதேசம் செய். இந்த மந்திரத்தின் ஸாமர்த்தியத்தால் அர்ஜுனன், பீஷ்மர் த்ரோணர் முதலான எல்லா சத்ருக்களையும் ஜயிக்கப் போகிறான் என்று, சிந்தைகொண்டிருந்த மனமுள்ள தர்மபுத்திரரைப் பார்த்துச் சொன்னார். இவ்வாறு ஸ்ரீ வேதவியாஸர் சொல்லி ஸமஸ்த தேவர்களை தரிசிக்கும்படி செய்யும் ப்ரதிஸ்மிருதி என்னும் மந்திரத்தை தர்மபுத்திரருக்கு உபதேசம் செய்தார். ஆனால் வேதவியாஸர் அர்ஜுனனுக்கு ஸாக்ஷாத்தாய் உபதேசம் செய்யவில்லை. ஸாக்ஷாத்தாய் அவர் உபதேசம் செய்திருந்தால் அந்த மந்திரத்திற்கு அதிகமான பலன் உண்டாகும் என்றும், பரம்பரையாய் உபதேசம் செய்தால் பீஷ்மத்ரோணாதிகளை ஜயிப்பதில் மாத்திரம் அதற்கு ஸாமர்த்தியம் ஏற்படும் என்றும், இதற்கு மேல் அவனுக்கு அதிகமான ஸாமர்த்தியத்தை தரலாகாதென்றும், பீஷ்மாதிகளை ஜயிக்கும் ஸாமர்த்தியம் தருவது மட்டில் உசிதமென்றும் நிச்சயித்து ஸ்ரீ வேதவியாஸர் அர்ஜுனனுக்கு இந்த மந்திரத்தை ஸாக்ஷாத்தாய் உபதேசம் செய்யவில்லை. தர்மபுத்திரருக்கு உபதேசம் செய்து ஸர்வக்ஞராயும் ஸர்வகர்த்தாவாயுமுள்ள பகவான் வேதவியாஸர் புறப்பட்டுப் போனபின், தர்மபுத்திரர் இரகசியமாய் அர்ஜுனனுக்கு அந்த மந்திரத்தை உபதேசம் செய்தார். அந்த மந்திரத்தைப் பெற்று அர்ஜுனன் தர்மபுத்திரரையும் பீமசேனரையும் நமஸ்கரித்து நகுலனையும் ஸகதேவனையும் ஆலிங்கனம் செய்துகொண்டு இந்திர கிலம் என்னும் மலைக்குச் சென்றான்.

அங்கிருந்துகொண்டு ருத்திரனுள்ளே இருக்கும் நாராயணனை தியானித்து அர்ஜுனன் தபஸ் செய்தான். ஆறுமாசப் ஆகவும் தன்னைக் கொல்வதற்காக வென்று பன்றி ரூபத்துடன் வந்த மூகன் என்னும் அசுரனை அர்ஜுனன் அந்த மலையில் கண்டான். தன்னை அந்த காட்டுப்பன்றி கொல்ல வருவதாய் எண்ணி வீரனான அந்த அர்ஜுனன் காண்டீவதனுஸ்ஸுக்கு நாண் கட்டி வஜ்ஜிராயுதத்திற்கு ஸமானமான அநேக பாணங்களை அதன் சரீரத்தின் மீது ப்ரயோகம் செய்தான். அந்த பன்றியின் பின்னு

வேட ரூபத்தைத் தரித்த பரமசிவன் பார்வதி ஸமேதராய் வந்து பாணப்ரயோகம் செய்தார். அந்த பரமசிவனாலும் அர்ஜுனனாலும் அடிபட்டு பாபபுத்தியுள்ள அந்த மூகாஸுரன் பிராணனை விட்டான். நான் தான் இந்த பன்றியை துரத்திக்கொண்டு வந்தேனாதலால் என்னுடன் நீ யுத்தம் செய் என்று வேட ரூபம் தரித்த பரமசிவன் அர்ஜுனனைப் பார்த்துச் சொன்னார். உடனே அர்ஜுனன், அப்படியானால் ஹே வேடா! நில். நில். இனி என்னிடமிருந்து நீ தப்பப்போவதில்லை என்று சொன்னான். இவ்வாறு அந்த கிராத ரூபியான பரமசிவனும அர்ஜுனனும் பேசி, மனுஷ்யோத்தமர்களான அவ்விருவர்கள் மகா யுத்தம் செய்தனர். அந்த யுத்தத்தில் அர்ஜுனனின் எல்லா ஆயுதங்களையும் பரமசிவன் விழுங்கி விட்டார். பிறகு அர்ஜுனன் காண்டீவ தனுஸ்ஸை தூக்கி அதனால் பரமசிவனை அடித்தான். அச்சமயம் பரமசிவன் சிரித்துக் கொண்டு காண்டீவ தனுஸ்ஸையும் விழுங்கி விட்டார். பிறகு மனுஷ்யோத்தமர்களான அவ்விருவர்களுக்குள்ளும் பாகு யுத்தம் நடந்தது. பிறகு பரமசிவன் அர்ஜுனனை பிண்டம் போல் பிடித்து விட்டெறிந்து விட்டார். பரமசிவனால் சங்கடப்பட்ட அர்ஜுனன் மகா மூர்ச்சையை அடைந்தான். பரமசிவன் முன்பு க்ருடத்வஜனான விஷ்ணுவை இவ்வாறு ப்ரார்த்தித்தார். எனக்கு குறைந்தவர்களான இந்திராதிகளுக்கு என்னால் ஜயிக்கப்படாதிருக்கும் தன்மையான அஜேயத்வமாகிய வரத்தைக் கொடுக்கிறீர். அவர்கள் உம்முடைய ப்ரஸாதத்தால் என்னால் ஜயிக்கக் கூடியவர்களாய் ஆகவேண்டும். என்று இவ்வாறு சொல்லிக் கொள்ளப்பட்ட மகாவிஷ்ணு ருத்திரனுக்கு அவர் கேட்ட வரனைக் கொடுத்தார். ஆகவே தான் பரமசிவன் யுத்தமத்தியில் இருந்த அர்ஜுனனை ஜயித்தார். ஞானத்தால் அடர்தவரான ஸ்ரீ வேதவியாஸர் விஷ்ணுவே ரிஷியாயும் தேவதையாயுமுள்ள சுத்த வைஷ்ணவ மந்திரங்களை அர்ஜுனனுக்கு உபதேசம் செய்யவில்லை. விஷ்ணு தேவதையாயும் ருத்திரன் ரிஷியாயுமுள்ள மந்திரங்களை மட்டில் உபதேசம் செய்தார். இந்த ஸாமானிய மந்திரங்களை பீஷ்மாதிகளை ஜயிக்கப் போதுமானது என்றும் ஜயத்தைத்தரும் சுத்த வைஷ்ணவ மந்திரங்களை உபதேசம் செய்து விட்டால்



அதனால் மகா விருத்தியடைந்து போய் அர்ஜுனனுக்கு அகங்காரம் உண்டாய் விடுமென்றும் போஜித்து ஸ்ரீ வேதவியாஸர் சுத்த வைஷ்ணவ மந்திரங்களை அர்ஜுனனுக்குத் தரவில்லை.

அர்ஜுனன் பிரக்ஞையை அடைந்த பிறகு ஜயமடைய விருப்பமுள்ளவனாய் ஸ்ரீ வேதவியாஸர் சொன்ன மந்திரத்தால் பரமசிவனை ஆராதித்தான். அர்ஜுனன் சிவலிங்கத்திற்கு ஸமர்ப்பணம் செய்த புஷ்பங்களெல்லாம் அந்த வேடனுடைய தலையில் போய் நின்றன. பிறகு அர்ஜுனன் அந்த கிராதனை பரமசிவனென்று தெரிந்து கொண்டு அவரை நமஸ்கரித்தான். பிறகு பரமசிவன் அர்ஜுனனுக்கு பாசுபதாஸ்திரத்தைக் கொடுத்தார். அந்த பாசுபதாஸ்திரத்துக்கு தெய்வம் விஷ்ணு தான். அந்த அஸ்திரம் பசுபதியான பரமசிவனால் ஸம்பாதிக்கப்பட்டதால் அதற்கு பாசுபதமென்ற பெயர் வந்தது. அப்பொழுதே எல்லா திக்பாலகர்களும் அர்ஜுனனுக்கு ப்ரத்யக்ஷமாய் கண்ணில்பட்டு தம் தம் அஸ்திரங்களை அவனுக்கு தந்தருளினார்கள். இந்திர பகவான் அர்ஜுனனிடம் வந்து இவ்வாறு சொன்னார். நிர்தோஷனான அர்ஜுனா! உன்னிடம் ப்ரீதியடைந்திருக்கிறேன் ருத்திரனுள்ளே ருத்திராந்தர்கதனாயுள்ள விஷ்ணு வெனப்பெயர் கொண்ட பிரம்மத்தை நீ ஸந்தோஷப்படுத்தினாய். ஆகையால் நீ என் லோகத்திற்கு வா. உனக்கு என் ரதத்தை அனுப்புகிறேன். என்றிவ்வாறு சொல்லிவிட்டு இந்திர பகவான் ஸ்வர்க்க லோகம் சென்றார். இந்திர பகவானின் ரதத்தை எடுத்துக் கொண்டு இந்திரனின் ஸாரதியான மாதலி இந்திரகீல பர்வதத்திற்கு வந்து சேர்ந்தான். அர்ஜுனன் இந்திரனின் ரதத்திலேறிக்கொண்டு இந்திரனின் லோகமான ஸ்வர்க்கத்திற்கு வந்து சேர்ந்தான். அர்ஜுனன் எல்லா தேவர்களாலும் பூஜிக்கப்பட்டவனாய் இந்திர பகவானால் அவருடைய ஸிம்ஹாஸனத்தில் உட்கார்த்தி வைத்துக் கொள்ளப்பட்டான். இந்திர பகவான் தன்னுடைய வேறொரு ரூபமான குருவம்சத்து வீரனான அர்ஜுனனை ஸ்நேகத்துடன் ஆலிங்கனம் செய்துகொண்டு அர்ஜுனனுடைய முகத்தைப்பார்த்து ஸந்தோஷமடைந்தார். (தொடரும்)

# ஸ்ரீவாதிராஜஸ்வாமிகளின் சரித்திரம்.

(முன் 311ம் பக்கம் தொடர்ச்சி)

ஓர் சிற்றரசனுடன் கடுமையான யுத்தம் ஏற்பட்டு அதில் அந்த அரசன் தோற்றுப்போய் பெண்டு பிள்ளைகளைவிட்டு ராஜ்யத்தை எல்லாம் துறந்து தன் உயிர்தப்பித்துக்கொள்ள கால்நடையாய் ஓர் வனமார்க்கமாய் ஓடினான். அச்சமயம் அந்த நிர்ஜனமான வனத்தில் ஸ்ரீவாதிராஜர் தனியே தவம் செய்திருந்தார். அரசன் தன் திகிலில் அவரைக்காணாமல் ஓடிக்கொண்டிருக்கவும், அவருடைய தபோக்னி அரசனை பாதிக்கவும், ஏது இங்கு காட்டுத்தீயோ! இதுவும் என்னை சூழ வேண்டுமோ! என்று நாற்புறமும் பார்க்க தேஜப்புஞ்ஜராய் விளங்கும் மகாயதீசுவரர் ஒருவர் அங்கு கண்ணைமூடி யோகாஸனத்தில் அமர்ந்து அஸம்பிரக்ஞாத ஸமாதியுடன் தவத்திலிருப்பதைப் பார்த்து பிரமித்தான். அவரைச்சரணம் புக எண்ணங்கொண்டான். அவரால் தன் துக்கம் தீறலாமென்று தைரியம கொண்டான். அக்காட்டிலிருந்து வெளிநாட்டுக்கு ஓடுவதை நிறுத்திக்கொண்டான். சமீபம் வந்து பலதடவை ஸாஷ்டாங்கம் நமஸ்கரித்து தான் இன்னான் என்பதை அறிவித்துக்கொண்டான். அவர் ஸமாதியிலிருக்கிறார் என்பதை கண்டுகொள்ளாமல் தன்னை ஏற்றுக்கொள்ளாயல் தன்னை ஏற்றுக்கொள்ள அவர் சம்மதிக்கவில்லையோ என்று பயந்தான். கண்ணீர் சொரிந்தான். தன் விருத்தாந்தங்களை எல்லாம் ஆதியோடந்தமாய்ச் சொல்லிக்கொண்டான். இப்படி இருக்க ஸ்ரீவாதிராஜரின் சமாதி கலையவும் கண்ணைத்திறந்து அரசனைப்பார்த்து நீ யாரென்று கேட்டார். தான் ஸோதாபுரத்து அரசனென்றும் தனக்கு ஏற்பட்டிருக்கும் சங்கடம் இப்பேர்பட்டதென்றும் அறிவித்து தன்னை காப்பாற்ற அனுக்ரஹிக்கும்படி ப்ரார்த்தித்தான். உடனே ஸ்ரீவாதிராஜர் கோபம் சீறிக்கொண்டு "அடே பாதகா! நில்லாதே என் எதிரில் நீ எத்தனையோ பிரம்மஹத்யைகளைச் செய்தவன். பிராம்ணர்களுக்கு பெருங் கண்டகன். வேதத்திற்கு முக்யத்ரோகி! சண்டாளா! தவத்திலிருந்து எழுந்து பரமசுத்தனாயிருக்கும் என்னை அசுத்தப்படுத்த நீ எங்கேடா என் எதிரில் தோன்றினாய். உன்னைப்பார்த்த தோஷம் நீங்க நான் மீண்டும் ப்ராணாயாமம் செய்யவேண்டும். அடேபாதகா! பிராம்மண தெய்வமாய் வைதீக சக்ரவர்த்தியாய் விளங்கும் பரம வைஷ்ணவோத்தமமான பரமசிவனின் பெயரைச்சொல்லி எத்தனை பிராம்மணர்களை வதைத்து வைதீக மதத்தைப்பாழாக்கினாய்.



ஜாலக்காரனை உன் பாஷண்டி குருவின் வார்த்தைக்கு மயங்கி பிராம்ணர்களுக்கு துரோஹம் செய்தாய். நீ செய்த துஷ்கிருத்யங்களுக்கு இவ்வளவு சங்கடங்களை நீ அனுபவிப்பதும் போதாது. இன்னமும் பலசங்கடங்கள் உனக்கு ஏற்படவேண்டும். உன்னை வைத்து உயிருடன் உன் சரீரம் கொளுத்தப்படவேண்டும். பிரம்மத்வேஷியான நீ அவ்வாறு தகிக்கப் படுவதைப் பார்ப்பது தோஷமும் ஆகாது. மகா பாபியே! ஓடிப்போ! நில்லாதே என் எதிரில். என் தபோ அக்னியால் கொளுத்தி விடுவேன் என்று ஸ்ரீவாதிராஜர் ரௌத்ராகாரமாய் கோபங்கொண்டு அந்த வனமே நடு நடுங்க அட்டகாசம் செய்ய, அரசன் மகா பீதியடைந்து இனி தன் உயிர்தப்பாதென்றே நிச்சயித்து, துக்க ஸாகரத்தில் மூழ்கி ஒன்றும் தோன்றாமல் வேறு அறுந்த மரம்போல் தடாலென்று ஸ்ரீவாதிராஜரின் பாதத்தில் மூர்ச்சையாய் விழுந்தான். சிறிது நேரம் பிரக்ஞையற்று கிடந்து தானாகவே மூர்ச்சை தெளிந்து சுயப்பிரக்ஞை அடைந்த பிறகு தான் பிராம்ணர்களுக்கு செய்துவரும் சங்கடங்களை எல்லாம் நினைத்து மிகவும் வருந்தி பச்சாதாபமடைந்து இப்பெரியவரால் தனக்கு நற்கதியும் உய்யும் வழியும் ஏற்படவேண்டுமென்று திடபுத்திகொண்டு கண்ணால் தாரைதாரையாய் ஜலம் விட்டுக்கொண்டு ஸ்ரீவாதிராஜரின் காலில் அடிக்கடி நமஸ்கரித்துக்கொண்டு "ஸ்வாமி! என்மீது கருணைகாட்டி நான் சொல்லும் வார்த்தையை சிறிது கேட்க வேண்டும். நான் மகா பாபிஷ்டன் என்பது உண்மையே! நான் பிரம்ம ஹத்யகாரன் என்பதும் ஸத்யமே! ஆனால் நான் செய்த இந்த கடூரமான பாபங்களுக்கு யார் காரணம் என்பதை தாங்கள் சிறிது கவனிக்கவேண்டுமென்பது என் பிரார்த்தனை. நான் அதிகம் படித்தவனல்ல, நான் குருவென்று விசுவாசம் வைத்து குருவின் சொற்படி நடப்பதுதான் அரசர்களின் கடமை என்று மட்டில் தெரிந்துகொண்டு அவர் சொல்வதெல்லாம் பரமசிவனின் ஆக்ஞை என்று நம்பி மோசம் போய் முட்டாள் தனத்தால் தகாத காரியங்களை செய்துவிட்டேன். இப்பொழுது தங்கள் திருமுகத்தை தரிசித்து தங்கள் சமீபத்தில் இருந்ததாலேயே எனக்கு நல்ல ஞானம் பிறந்திருக்கிறது. பிராம்மணர்கள் உத்தமவர்ணத்தார்கள் என்பதை ஒப்புக்கொள்ளாமலிருந்தாலும் அவர்கள் நிரபராதிகளான ஜீவர்கள் என்பதையாவது கருதி நாம் அவர்களை ஹிம்சிக்காமல் விட்டிருக்கலாம். உலகத்திற்கு தாய் தந்தையரான பரமசிவன் நிஷ்காரணமாய் நிரபராதிகளான பிராம்மணர்களை சங்கடப்படுத்தும்படி ஒருக்காலும் ஆக்ஞையிட்டிருக்கமாட்டார்தான். நான் சிறிதும் இதைப்பற்றி யோசிக்கவில்லை. அவருடைய மோக வலையில் சிக்கி புத்

தியை இழந்தேன், தகாத காரியங்களைச்செய்தேன். எங்கும் நிறைந்த பரம்பொருளின் கோபத்திற்கு பாத்திரனானேன். அளவிலா துன்பத்திற்கு ஆளானேன். நாடு இழந்து நகரமிழந்து உயிர்தப்ப வனாந்தர மார்க்கமாய் முள்ளிலும் கல்லிலும் பாய்ந்தோடுகிறேன். நான் செய்த காரியங்களில் ஏதோ அணுவளவு புண்யமிருந்ததால் தங்களுடைய தரிசனம் கிடைத்தது. இனி என் உயிர் நேசர் ஸாதுக்களின் தலைவர், ஈசனின் தூதர், என்னைக் காக்கவந்த நாதர், தாங்களே ஆனதால் தங்களை இனி விடேன். தாங்களே சரணம், சரணம். என்னை மன்னித்து என்னிடம் கருணை காட்டி என் சங்கடங்களை நீக்கத் தாங்கள் ஓம் என்று சொல்லாதவரை இந்த இடம் விட்டு நான் நகரமாட்டேன். பலநாள் பட்டினி கிடந்து என் உயிரையே தங்களுக்குத் தத்தம் செய்வேன். இது ஸத்யம், ஸத்யமென்று சொல்லி ஓவென்று அலறிக்கொண்டு, ஸ்ரீ வாதிராஜரின் பாதத்தில் மறுபடியும் மூர்ச்சையாய் விழுந்தான். கருணைக்கு கடலான ஸ்ரீ வாதிராஜர் உடனே அவனிடம் மனமிரங்கி பிராம்மண த்ரோஹியான அவனுடைய குருவின் துஷ்ட உபதேசத்தால் இவனுடைய புத்தி கெட்டதேயன்றி இயற்கையாய் இவன் துஷ்டன் அல்லன் என்பதைத் தெரிந்துகொண்டு, அவனுக்கு ஸமாதான வார்த்தைகளைப்பேசி, இனி அவருடைய வார்த்தையின்படி நடப்பதாய் வாக்குத்தத்தம் வாங்கிக்கொண்டு அவனுடைய கையில் மந்திராக்ஷதையைக் கொடுத்து இனி உடனே திரும்பி தனது நாட்டினுள்ளே போய் சத்ருவுடன் யுத்தம் செய்து அவனை ஜயித்து, ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொள்ளும்படி சொன்னார். அதற்கு அரசன் நடுங்கி, ஸ்வாமி! நான் ஏகாங்கியாய் ஒண்டியாகத்தானே இருக்கிறேன். நான் உள்ளே பிரவேசித்தால் என்னை சத்ருசைனியம் வதை செய்துவிட்டு கொன்று விடுமே. நான் ஒருவனே இழந்து எப்படி அந்த அரசனுடன் யுத்தம் செய்வது. நான் மிகவும் பயந்திருக்கிறேன். யோசனை தோன்றாமல் இவ்விதம் கேட்கிறேன், என்னை மன்னிக்க வேண்டும். தாங்கள் என்ன சொன்னாலும் அதன்படி கேட்க சித்தமாய் இருக்கிறேன் என்று கேட்க ஸ்ரீ வாதிராஜர் சிரித்துக்கொண்டு, ஹே பூபதி! என் பயப்படுகிறாய். நாம் உம்மிடம் அனுக்ரஹம் செய்து மந்திராக்ஷதையைக் கொடுத்து விட்டோம். இந்த மந்திராக்ஷதையின் மகிமையால் உன்னிடம் எல்லோருக்கும் விசுவாசம் ஏற்படப் போகிறது. உனக்கு பாதகமாயிருந்த உன் சேனாநாயகர்களே உன்னைக் கண்டதும் உனக்கு சகாயமாய் வரப்போகிறார்கள். எங்கள்தெய்வமான ஸ்ரீ ஹயக்ரீவன் உனக்கு கட்டாயம் ஸஹாயம் செய்யப் போகிறார்.

(தொடரும்)



ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

# ஸ்ரீமத்வ விஜயம்.

## ஐந்தாவது ஸர்க்கம்.

(முன் 303ம் பக்கம் தொடர்ச்சி.)

(35) வழியில் தன் பிரம்மாண்டமான ப்ரவாகத்தால் இரு கரையிலுள்ள மரங்களை விளையாட்டாய் கீழே தள்ளிவருவதும் தன் ஜலத்தில் ஸ்நானம் பானம் செய்வதால் சுத்தியைத்தருவதும் கேரளதேசத்திற்கு அலங்காரமாயிருப்பதும் பிராம்மணோத்தமர்களால் ஸேவிக்கப்படுவதுமான பயஸ்வினி என்னும் நதியைப்பார்த்து இனி தன் வைஷ்ணவ மதத்தை அதன் விரோதிகளை சரீர தண்டனைகளால் சிக்ஷித்து, எங்கும் ஸ்தாபிக்க அதன் தீரத்தில் அவதரிக்கப்போகிறவளாய் இந்நதியைப்போலவே விளையாட்டாய் தன் எதிரில் கண்ட துஷ்ட ராஜர்களைக் கொல்பவளாயும் தன்னை ஸ்மரித்தல் தன் நாமாவைச்சொல்லுதல் இத்யாதிகளாலேயே சித்த சுத்தியைத் தருபவளாயும் கேரள தேசத்தில் எங்கும் கோயில்கொண்டு அலங்காரமாயிருப்பவளாயும் பிராம்மணர்களால் அர்ச்சிக்கப்படுகிறவளாயுமுள்ள ஸ்ரீ விஷ்ணு சகோதரியான துர்க்கா தேவியை ஸ்மரித்தார். (36) அந்த பயஸ்வினி நதி தீரத்திலிருந்து புறப்பட்டு, நாளடைவில் சிறப்புள்ளதான ஸ்ரீ அநந்த சயனம் வந்து, அங்கு ஆதிசேஷனின் மீது படுத்திருப்பவரும் பத்மத்தை நாபியில் கொண்டவரும் நீலாம்பல்போல் ஸுந்தரமான சரீரகாந்தி பொருந்தியவரான ஸ்ரீலக்ஷ்மீபதி ஸ்ரீபத்மநாபமூர்த்தியின் சமீபம் வந்து சாஷ்டாங்கம் நமஸ்கரித்தார். (37) ஸித்தாந்தத்தை அறிந்தவர்களில் மிகவும் மேலானவரான ஸ்ரீமத்வாசாரியார் பண்டிதர்களின் சபையில் தம் சிஷ்யர்களுக்கு பிரம்ம ஸூத்திரங்களுக்கு, விஷ்ணுவாகிய பரப்ரம்மம் குணங்களுக்கு ஸமுத்திரம்போல் இருப்பதால் அல்பகுணமுள்ள ஜீவகணங்களைவிட விலக்ஷணர் அதாவது பேதமுள்ளவர் என்று மேன்மேல் ரூபித்துக்காட்டி அதன்படி அர்த்தம் செய்தார். (38) முன்பு வாயுபகவானிடம்

த்வேஷியாயிருந்த ஆதிசங்கராசாரியார் இச்சமயம் அபராம் சுநாத்னம் என்ற குலத்தில் பிறந்தவராய், இவ்வூரில் ஸ்ரீமத்வாசாரியாரை சந்தித்து, பிரம்மசூத்திர பாஷியத்தை ஸ்வதந்தரமாய் இயற்றி இருக்காத உம்மிடம் தம் பாஷியத்தை ஸ்வதந்திரமாய் இயற்றி தம்மதத்தை ஸ்தாபித்திருக்கும் சங்கராசாரியாரின் பாஷிய விஷயமாய் வாதமாடுவது மகத்தான அக்ரமம் என்று ஸ்ரீமத்வாசாரியாரிடம் தோஷத்தை கல்பித்துச் சொன்னார். (39) ஹே சங்கரரே! நான் உங்கள் பாஷியத்தின் மீது சொன்ன தூஷணைகளுக்கு சமாதானம் தோன்றினால், அதை இப்போதே சொல்லும். இல்லாவிடில் சும்மா இரும். நான் பாஷியம் செய்யவில்லை என்று அனுவசியமான காரணம்சொல்லி தப்பித்துக் கொள்ளுகிறீர். உமக்கு என் பாஷியம் வேண்டுமென்றிருந்தால் அதையும் செய்து விடுகிறேன். நான் பாஷியத்தைச் செய்யக் கூடாதென்று அரசன் உத்திரவு போட்டுத்தடுத்துவிடவில்லை. நான் அதை தாராளமாய்ச்செய்யலாம். என்றிவ்வாறு ஜகத்துக் குருவான ருத்திராதிகளுக்கும் குருவாயுள்ள ஸ்ரீமத்வாசாரியார் சொன்னவார்த்தையை எல்லா ஸாது ஜனங்களும் மிகவும் ஆமோதித்தனர். (40) அவ்வூரில் நடந்த மகாசபையில் சோபித்து வந்த ஸ்ரீமத்வாசாரியாரின் சரீர லக்ஷணங்களைக்கண்டு, ஸாமுத்ரிக லக்ஷணங்களை அறிந்த புத்திமான்கள் ஸ்ரீபகவத்பாதாளின் தேகம் உத்தம புருஷர்களுக்கு இருக்கவேண்டியதான முப்பத்திரண்டு லக்ஷணங்களுடன் அமைந்திருப்பதாய் அவரை சிலாகிக்கவும், சங்கராசாரியாரைச்சேர்ந்தவர்கள் அவருடைய ஆசாரியாரான இந்த சங்கரரின் வேறு எந்த லக்ஷணங்களையும் சிலாகிக்கமுடியாமல், அவருடைய இடையின் பிருஷ்டபாகம் எவ்வளவு பருத்து இருக்கிறதென்று அவைகளை மிகவும் சிலாகித்துப் பேசினர். (41) இதைக்கேட்டு ஸ்ரீமத்வாசாரியார் லக்ஷண சாஸ்திரத்தின்படி பிருஷ்டபாகம் பருத்திருப்பது எவ்வளவு தோஷமானது அவலக்ஷணமானது என்பதை எல்லோருக்கும் விளங்கும்படி எடுத்துச்சொல்லவும், அதைக்கேட்டுச் சகியாத அந்த சங்கராசாரியார் அதற்கு பதில் கூறமுடியாமல் ஸ்ரீமத்வாசாரியார் பிடித்திருந்த தண்டத்தை பிடுங்கி அதை ஒடித்துவிடுவதாய்



சபதம் கூறி, அவ்வாறு அவ்விருவர்களுக்குள் பலமான சண்டை நடந்து, ஸ்ரீமத்வாசாரியாரின் தண்டத்தைப்பிடுங்கி ஒடிக்க முடியாமல், அவர் தோல்வியடைந்தார். அவ்வாறு தன்னால் முடியாத காரியத்தில் படாடோபமாய் ப்ரதிக்ஞை செய்வது அயோக்யர்களின் ஸ்பாவமே ஆகும் (42) இவ்வாறு அநந்தசயனத்தில் சங்கராசாரியாருடன் கலகம் ஏற்பட்டு, பிறகு அவ்வூரிலுள்ள மகரிஷிகள் ஸேவித்திருக்கும் புண்ய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து, அவ்வூரிலிருந்து புறப்பட்டு சீக்கிரத்தில் சமீபத்திலுள்ள கன்யா குமரி தீர்த்தம் ஸமுத்திரத்தில் ஸ்நானம் செய்து, அதன் ஸமீபத்திலுள்ள ஜநார்த்தனம் முதலான க்ஷேத்திரங்களின் வழியாய் தனுஷ்கோடிக்குவந்து, அங்கு ஸேது ஸ்நானம் செய்து ராமேசுவரத்தில் ஸ்ரீராமரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ராமலிங்கத்தில் அந்தர்கதராய், தன் முதல் அவதாரமான ஸ்ரீஹநுமாருக்கு முக்கியஸ்வாமியான ஸ்ரீராமசந்திரமூர்த்தியை ஸாஷ்டாங்கம் நமஸ்கரித்தார். (43) அங்கு ராமேசுவரத்தில் வீதியில் போய்க்கொண்டிருக்கும்பொழுது, முன்பு அநந்தசயனத்தில் தன்னுடன் சண்டைபோட்டவரான யதிரூபம்கொண்ட அஸுரனை அந்த சங்கரர், தன் எதிரில் வருவதைப்பார்த்துவிட்டு சிரித்துக்கொண்டு, தன் கையிலுள்ள தண்டகாஷ்டத்தை அவர் முன்னே நீட்டி, ஹே மூடா! மகா கோபிஷ்டனே! நீர் என் தண்டத்தை ஒடிக்கிறதாய்ச்சொன்னீர். நீர் ஆண்பிள்ளையாயிருந்தால் அதை இப்பொழுதாவது ஒடியும் பார்ப்போம். அப்படிஒடிக்காவிடில் நீர் ஓர் பேடியே, பிறட்டுவார்த்தைகளை பேசுகிறவராவீர் என்று சொன்னார். (44) இதைக்கேட்டு சங்கரர் வெட்கமடைந்து தலைகுனிந்துகொண்டுபோய், எப்படியாவது ஆள்களைக் கூட்டிக் கொண்டாவது இவ்வாறு தன்னை பகிரங்கமாய் சண்டைக்கு இழுத்த ஸ்ரீ மத்வாசாரியாரின் தண்டபங்கம் செய்ய விருப்பங்கொண்டு, அவ்வூரிலுள்ள உத்தமர்களான பிராம்மணர்களை தனக்கு ஸகாயம் செய்ய பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டும், அவர்கள் தன் சந்திர முகத்தாலேயே அவ்வூரிலுள்ள ஜனங்கள் எல்லோரையும் ஏன் உலகத்திலுள்ள யாரையும், சந்தோஷப்படுத்தும் மகாஞானவானான இந்த மத்வாசாரியாரை விவேகமுள்ளவன்

எவன் தான் துவேஷிப்பான் என்று சொல்லி சங்கரருக்கு சகாயம் செய்ய மறுத்து விட்டனர். (45) அவ்வூரில் நடந்த வித்வத் சபைகளில் பலவகைகளான சாஸ்திரங்களில் பண்டிதர்களான பலவகை வாதிகள் வந்துகூடி, வாதம் செய்ய எந்த எந்த சாஸ்திரங்கள் தொடங்கப் பட்டனவோ அந்த சாஸ்திரங்களிலெல்லாம் அபூர்வமான ப்ரதிபையால் பிரகாசிப்பவரான ஸமஸ்த வித்தைகளுக்கும் அதிபதியாயுள்ள ஸ்ரீ மத்வாசாரியார் அந்தந்த எல்லா வாதிகளையும் அவர்கள் சொன்ன கக்ஷிகளுக்குமேல் கக்ஷி சொல்லி ஜயித்தார். (46) அங்கு ராமேச்வரத்தில் ஸ்ரீ மத்வாசாரியார் தம் குருவான அச்யுதப்ரேக்ஷாசாரியாருடன் கூடியிருந்து, துர்பலர்களான அவ்வூரிலுள்ள அயோக்ய ஜனங்களின் விஷமங்களுக்கு சிறிதும் சலிக்காதவராய், நாய்களுக்கு சலிக்காமல் கிரி குஹையின் உள்ளேயிருக்கும் சிம்ஹம் போல், அந்த ராமேசுவரத்தில் சாதுர் மாஸ்யம் நான்கு மாஸங்கள் வாசம் செய்தார். (47) சாதுர் மாஸ்யம் முடிந்த பின்பு அவ்வூர் விட்டு கிரமமாய் மத்தியிலுள்ள புண்ய க்ஷேத்திரங்களைக் கடந்து, ஸ்ரீரங்க க்ஷேத்திரம் வந்து அங்கு மகா ஸௌந்தர்யம் வாய்ந்தவராய் சேஷசாயியாய் மகா ஜனங்களுக்கு மங்களங்களை அளிப்பவராய் உபய காவேரியின் குளிர்ந்த காற்றடிக்கப்பட்டவராயுள்ள ஸ்ரீரங்கநாதனை நாராயணனை பூர்ணப்ரக்ஞரான ஸ்ரீ மத்வாசாரியார் சாஷ்டாங்கம் நமஸ்கரித்தார். (48) பிறகு அந்த ஸ்ரீரங்கத்திலிருந்து புறப்பட்டு கிரமமாய் தக்ஷிணப்ராந்தியத்தியத்திலுள்ள அநேக க்ஷேத்திரங்களில் அநேக சிவாலயங்கள் விஷ்ணு ஆலயங்களை தரிசித்து, விஷ்ணு ஆலயங்களில் சாக்ஷாத் விஷ்ணுவையும் சிவாலயங்களில் சிவாந்தர்கதனுயுள்ள அந்தந்த பெயர் கொண்ட ஹரியையும் நமஸ்கரித்துக்கொண்டு, அந்தந்த ஊர்களில் அமானுஷமான தன் சாமர்த்தியங்களை வெளிக்காட்டிக் கொண்டு, இவ்வாறு தக்ஷிண திக் விஜயத்தை முடித்துவிட்டு, வடதிசையிலுள்ள ஊர்களுக்குப் போய்ச் சேர்ந்தார். (49) மிக்க ஸௌந்தரியம் வாய்ந்த ரூபமுள்ளவரான ஸ்ரீ மத்வாசாரியார் ஆங்காங்குள்ள ஜனங்களால் மிக்க ஆச்சரியத்துடனும் ஆதரணையுடனும் கண்டு கொள்ளப்பட்டவராய், பயஸ்வினி தீரத்திலுள்ள சிரேஷ்டமான ஊர்களுக்கு வந்து அங்கு ஒரு



ஊரில் ஓர் தேவாலயத்திற்குள் ப்ரவேசித்தார். (50) அத்யயனம் செய்யும் முறைப்படி சிக்ஷா கல்பம் வ்யாகரணம் நிருக்தம் ஜ்யோதிஷம் சந்தஸ் ஆகிய ஆறு வேதாங்கங்களுடன் வேதங்களை அத்யயனம் செய்து, அதன் அர்த்தம் இன்னதென்று சொல்வதில் நிச்சயபுத்தியுள்ள அந்த பயஸ்வினி தீரவாசிகளான பிராம்மணோத்தமர்கள், எல்லா வித்தைகளிலும் மகா நிபுணரென்று மூவுலகிலும் மகாபிரஸித்தியுடன் தாம் கேள்விப்பட்டிருக்கும் இதுவரை நேரில் கண்டிராத அந்த ஸ்ரீமத்வாசாரியாரைப் பார்த்து, அவருடன் பேசி அவருடைய வித்வத்பாகத்தை அறிய விருப்பமுள்ளவர்களாய் அந்த தேவாலயத்தில்வந்து கூடினர். (51) வித்வான்கள் மட்டில் அல்ல சாமானியர்களும் கூட அழகிய புன் சிரிப்புள்ள சந்திரவதனமுள்ளவரும் கமலக்கண்களுள்ளவரும் ஸுவர்ண மேனியுள்ளவரும் மிக்க மனோகரமான பேச்சுள்ளவரும் அலங்கார மற்றிருப்பிலும் உலகத்துக்கே அலங்காரமாயிருப்பவருமான அந்த ஸ்ரீ மத்வாசாரியாரைக் கண்ணாரப் பார்க்க ஆசைப்பட்டு ஓடிவந்து குவிழ்ந்தனர். (52)கல்வியாகிய மேலான காந்தியுள்ள வித்வான்களான நக்ஷத்திரங்களின் தேஜஸ்ஸைக் குறைப்பதில் சூரியனின் காரியங்களைச்செய்து வருகிறவரும், துஷ்டத்தனமாய்ப் பேசும் துர்வாதிகளான யானைகளின் ஜீவப்ரம்ம அபேதம் ஜகன் மித்யை ஈசுவரனின் நிர்குணத்தன்மை நிரவயவத்தன்மை முதலான ப்ரதானமான கும்பஸ்தலங்களைப் பிளப்பதில் சிம்ஹ சிரேஷ்டம் போல் ஆசரித்து வருகிறவரும், அசையும் பார்வையுள்ள ஆங்காங்கிருந்துவரும் ஜன ஸமூகத்தின் கண் விழிகளாகிய நீலோத்பல புஷ்பங்களை ஆனந்தப்படுத்துவதில் சந்திரன் போல் நடிப்பவரும், சபையோர்களின். சமூகத்திற்கு, அலங்காரமாயுள்ளவருமான ஸ்ரீ ஆனந்த தீர்த்தர் அந்த சபையில் பிரகாசித்தார்.

ஐந்தாவது ஸர்க்கம் முடிந்தது.

(தொடரும்)

ஸ்ரீ கிருஷ்ணார்பணமஸ்து.

## அப்பைய தீக்ஷதரின் அதிக்ஷேபணைகளுக்கு கண்டனம்.

ஸ்ரீ மத்வமதத்தின் மீது பலவகை தூஷணைகளை இத்தென்னாட்டு மகா பிரவித்த பண்டிதரான ஸ்ரீ அப்பய்ய திக்ஷதர் எடுத்துக்காட்டியிருப்பவைகளுக்கு அந்த காலத்திலிருந்த மகா யோகீசுவரராய் அறுபத்திநான்கு கலைகளிலும் மகா பிரவித்த பண்டிதரான ஸ்ரீவிஜயீந்திர ஸ்வாமிகள் தக்க ஸமாதானங்களை அளித்து அவைகளை எல்லாம் கண்டித்து ஸர்வக்ஞாசாரியாரான ஸ்ரீ ஆனந்த தீர்த்த பகவத் பாதாளின் ஸத்வைஷ்னவ மதத்தின் நிர்தோஷத்தன்மையையும் சிறப்பையும் ஸ்தாபித்துள்ளார். ஸாமானியர்களும் மயங்கும்படியான ரீதியில் ஸ்ரீமத்வ முகமர்த்தனமென்னும் நூலில் அவர் சொல்லியுள்ள தூஷணைகள் தற்போது இந்நகர் அத்வைத சபை முதலியவைகளில் அதிகப்ரசாரத்திலிருப்பதால் அவைகளை சிலதுகளைமட்டில் இங்குளடுத்துக்காட்டி அவைகளுக்கு ஸ்ரீவிஜயீந்திரர் மத்வாத்வகண்டகோத்தாரம் என்னும் நூலிலும் ஸ்ரீமான் பைடனவி நாராயணாசாரியார் அத்வைதகாளாநலம் என்னும் நூலிலும் சொன்ன கண்டனங்களை இங்கு காட்டுகிறோம்.

### தூஷணைகள்.

ஸ்ரீமான் அப்பய்ய தீக்ஷிதர் மத்வமுக மர்த்தனத்தில் சொல்வதாவது:- (1) சிவம் வா விஷ்ணும் வா யத்யபி தததி சாஸ்திரஸ்ய விஷயம் ததிஷ்டம் க்ராஹ்யம் ந: ஸகுணமபி தத்ப்ரம்ம பஜதாம்| விரோதோ நாதீவஸ்புரதி நஹிநிந்தா நயவிதாம் நஸூத்ராணமர்த்தாந்தரமபி பவத்வார்யமுசிதம்|| ததாபி ஆனந்த தீர்த்தயமதமக்ராஹ்யமேவகந:| யத்ர வைதிக மர்யாதா பூயஸ்யாகுலதாம் கதா|| 2 || வேதாந்த சாஸ்திரத்தால் சொல்லப்படுகிறவர் சிவனென்று சொன்னாலும் சரி, விஷ்ணுவென்று சொன்னாலும் சரி, அது எமக்கு இஷ்டம்தான், ப்ரம்மம்ஸகுணமென்று அதை உபாஸிக்கும் எமக்கு அது ஏற்றுக்கொள்ளக்கூடியதே ஆகும். நஹிநிந்தா நியாயத்தை தெரிந்துகொண்டால் அதாவது வேதத்தில் ஓரிடத்தில் வெள்ளியை நிந்தித்து ஸுவர்ணத்தை ஸ்தோத்திரம் செய்தால் ஸுவர்ணத்தை ஸ்தோத்திரம் செய்வதற்காக வெள்ளியை நிந்திக்கப்பட்டிருக்கிறது என்ற மீமாம்ஸா நியாயத்தை ஒப்புக்கொண்டால் விஷ்ணுவை ஸ்தோத்திரம் செய்வதற்காக வேதவாக்யங்கள் விஷ்ணு ஸ்தோத்திரபரமாக காணப்படுகிறதேயன்றி சிவனை தூஷிப்பதற்காக புறப்பட்டதல்லவென்று ஏற்பட்டு வேதவாக்யங்களில்விசேஷமான விரோதம் காணப்படுவதில்லை, ஸூத்ரங்களுக்கு விச



வதோ முகத்வம் என்ற லக்ஷணமிருப்பதால் அவைகளுக்கு வேறு அர்த்தங்களை கல்பிக்கலாகாதென்றும் சொல்வதும் சரியல்ல. ஆகவே இந்த சந்தர்ப்பங்களைக்கொண்டு ஆனந்த தீர்த்தரின் மதம் ஒப்புக்கொள்ள கூடியதாயிருப்பினும், இந்த மத்வ மதத்தில் வேதத்திலுள்ள கௌரவம் மரியாதை மிகவும் கெட்டுப்போய் குழப்பமடைந்துவிட்டதால், இதை நாம் ஏற்றுக்கொள்ளத் தகுந்ததாயில்லை. வைதிக மரியாதை எவ்வாறு கெட்டுப்போயிருக்கிறதென்பதை நிரூபிக்கிறேன், ஆனந்த தீர்த்தர் பிரம்ம ஸூத்ரங்களை ஸமஸ்த சேதனு சேதன விலக்ஷணராயும் சிருஷ்டிஸ்திதி முதலான அநந்த கல்யாண குணங்களுள்ளவராயுமிருப்பதாய் பரப்ரம்மத்துடன் சேர்த்துவைக்கிறார். இதை இதரர்கள் ஒப்புக்கொண்டதல்ல, தன் அர்த்தத்திற்கு ஆதாரமாய் சதுர, கமட, கௌண்டரவ்ய, கௌண்டின்ய, மௌத்கல்ய, பௌஷ்யாயண, ஸௌகராயண, பாராசர்யாயண, மாத்யந்திருயண, கௌஷாரவ, காஷாயண, பிருஹதுத்தாலகாயண, கௌசிக, ஸைளபாண, வத்ஸ, கௌபவன, பால்லவேய, அக்னிவேச்ய, சதுர்வேதசிக, இந்திரத்யும்ன சாகை, பரம, என்னும் சுருதிகளின் வாக்யங்கள் இருப்பதாய் சொல்கிறார். அந்த சுருதிகளை இவர் ஒருவர்தான் சொல்கிறாரேயன்றி இதரர்கள் சொல்லவில்லை; ஆகவே இந்த சுருதிகளை இவரே கல்பனை செய்து சொல்லியிருக்க கூடும். இந்த வேதங்களுக்கு அனுஸாரியாய் அத்யாத்மம், நாராயண ஸம்ஹிதை, பிருஹத் ஸம்ஹிதை, நாராயண தந்திரம், ப்ரம்மதந்திரம், புருஷோத்தம தந்திரம், மாயாவைபவம், ப்ரம்மவைவர்தம், ப்ரம்ம தர்க்கம், பவிஷ்யத்பர்வம் முதலான நூல்கள் இருப்பதாய் மிகமிக அப்பிரவித்தமான நூல்களின் வாக்யங்களை சாக்ஷிகளாய் எடுத்து கூறியிருக்கிறார், அவைகளை எடுத்துச்சொல்வதால் தன்னிடமுள்ள மதிப்புக்குறையுமோவென்று பயந்து அந்த சம்சயத்தை நீக்க ஹனுமார் பீமசேனர் மத்வாசாரியார் என்று வரிசை கிரமப்படி, தான் சுயம் வாயுபகவானின் அவதாரமென்று, தானே தனது நூல்களில் உத்கோஷம் செய்திருக்கிறார். இதற்கு ஆதாரம் ப்ரதமோஹனுமான் நாமத்விதியோ பீமஏவச| பூர்ணப்ரஞ்ஸ்திருதீயஸ்து பகவத்கார்ய ஸாதக:|| என்று சுருதி இருப்பதாய் தானே அதை எடுத்துச்சொல்லிக்கொண்டிருக்கிறார். பலித்தாதத் வபுஷேதாயிதர்சிதம் என்னும் ரிக்வேத மந்திரத்திற்கு வாயு பகவானின் மூன்று அவதாரபரமாய்தானே அர்த்தத்தை கல்பித்துக்கொண்டிருக்கிறார். இவ்வாறு ப்ராமாணிக வரம்பு பலவாறு மீறியிருப்பது நன்றாய் தெரியவருகிறது. ஆயினும் யுக்தியுடன் கூடியிருக்கும் வார்த்தை

யை ஒப்புக்கொள்ளவேண்டியதே ஒழிய அதைச்சொல்பவரின் கௌர வத்தை கவனிக்கவேண்டாம் என்னும் நியாயத்தின்படி அந்த மதத்தை சிறிது எற்றுக்கொண்டு, இதில் எதாவது நன்ருய் பொருத்தமாயுள்ளதை எற்றுக்கொள்வோமென்றால், அப்படியும் இல்லை. அநேகமாய் அந்தமதத்தில் அவருடைய மனதுக்கு மட்டில் தெரிந்ததாயுள்ள வாக்யங்கள்தான் பிரமாணங்களாயிருக்கின்றனவே யல்லாது பிரசித்தமான நியாயங்கள் அந்த மதத்தில் எற்றுக்கொள்ளப்படவில்லை, அந்த மதத்தில் காட்டப்பட்டிருக்கும் நியாயங்களும் மிகவும் அல்பமானவைகள் எங்கும் அ[illegible]ய் எற்றுக்கொள்ளாதவைகள், பூர்வமீமாம்ஸையின் மரியாதையையும் [illegible]ன்கு எற்றுக்கொள்ளப்படவில்லை. ராம: ஸகிருஷ்ண தனுவாஸ்வபலாஜ் ஜிகாய, சப்தாஸ்ச விஷ்ணவி இத்யாதி அநேக இடங்களில், தனுசப்தத்திற்கு ஸர்வத்ரிதியா எகவசனம் தனுவா என்றும் விஷ்ணு சப்தத்திற்கு ஸப்தமி எகவசனம் விஷ்ணவி என்றும், இவ்வாறு அஸாதுவான சப்தங்கள் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன, சுலோகங்கள் ரசனம் செய்யப்பட்டதிலும் அன்வயங்கள் இல்லை. எங்குமில்லாத வ்ருத்தங்கள் காணப்படுகின்றன. இதெல்லாம் ஆனந்த தீர்த்தர் செய்திருக்கும் ஸூத்ர பாஷ்யம், அனுவ்யாக்யானம் பாரத தாத்பரிய நிர்ணயம் முதலான நூல்களைப்பார்த்தால் தெரியும். ஆகையால் இப்பேர்ப்பட்ட மதம் எற்றுக் கொள்ளத்தகுந்ததல்ல

## ஓர் கண்டனம்.

ஆயினும் ஆனந்த தீர்த்தருடைய மதம் எமக்கு எற்றுக்கொள்ளத் தகுந்ததல்ல என்று சொன்னது சரியே, ஆனந்த தீர்த்திய மதம் ததாபி நக்ராஹ்யமஸ்மாகமிதீரிதம் யத் | யுக்தம் ததா தக்கடுகண்டகாசீ க்ரமேளக: கிம்கதளீபலார்ஹ:|| கசப்பு முள்ளுத் தழைகளைச் சாப்பிடும் ஒட்டகைக்கு இனிதான வாழைப்பழம் எற்காததுதான். அப்படி மீறி சாப்பிட்டால் அதற்கு மரணமே உண்டாகும்.

அபிரஸித்தமான சுருதிகளை எடுத்துச்சொன்னால் அது தோஷமாகாது. ச்ரௌதமான கர்மங்களையும் ஸ்மார்த்தமான கர்மங்களையும் விதானம் செய்யும் மந்திரங்கள் அநேகமாய் எல்லாமே அபிரஸித்தமான சில சுருதிகள்தான். அவைகளைதான் அநேகமாய் தம் தம் ஸூத்ரங்களில் ஆபஸ்தம்பர் முதலியோர் கூறியிருக்கின்றனர். ஆபஸ்தம்பாதிகள் ரிஷிகள் என்றும் அவர்கள், எந்த வாக்யங்களை வேதங்களென கண்டுகொள்கிருர்களோ அவைகள்தான் வேதங்களென்றும் தனியாய் கக்ஷி பேசுவதற்கில்லை. ரிஷிஜாதி என்று ஒன்று தனியே இல்லை. த்ரிகாலதர்சியாரோ அவர்தான் ரிஷி, ஸம்பூர்ணமாய் அத்யயனம் செய்தவரும் ரிஷியாவார், பட்டபாதர் முதலியவர்கள் ஸாங்க வேதங்களை அத்யயனம் செய்தவர்களென்றும், சங்கராசாரியார் முதலியோர் ஸர்வக்ஞரென்றும் நீங்கள் ஒப்புக்கொண்டிருப்பதால் அவர்கள் சொல்வதை எல்லாம் பிரமாணமாகவே நீங்கள் எற்றுக்கொண்டிருக்கிறீர்கள்.



# ஆசாரமாலை.

(முன் 339ம் பக்கம் தொடர்ச்சி.)

## அக்ஷரதேவதைகளும் ஸ்தானமும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | அ | அஜன் | (சிரஸ்ஸில்) |
| 2. | ஆ | ஆனந்தன் | (முகத்தின் சுற்றிலும்) |
| 3. | இ | இந்திரன் | (வலது கண்) |
| 4. | ஈ | ஈசன் | (இடது கண்) |
| 5. | உ | உக்ரன் | (வலது காது) |
| 6. | ஊ | ஊர்ஜன் | (இடது காது) |
| 7. | ர்ரு | ரிதம்பரன் | (வலது நாஸி துவாரம்) |
| 8. | ர்ர்ரு(RRU) | ர்ர்ருகன் | (இடது நாஸி துவாரம்) |
| 9. | ல்ரு | ல்ருஜன் | (வலது கன்னம்) |
| 10. | ல்ர்ரு(ILRU) | ல்ரூசன் | (இடது கன்னம்) |
| 11. | ஏ | ஏகாத்மா | (மேல் உதடு) |
| 12. | ஐ | ஐராவதன் | (கீழ் உதடு) |
| 13. | ஓ | ஓஜோபிருதன் | (மேல் பல்வரிசை) |
| 14. | ஔ | ஔரஸன் | (கீழ்பல்வரிசை) |
| 15. | அம | அந்தன் | (வாயினுள் மேல்பாகம்) |
| 16. | அ: | அர்த்தகர்பன் | (வார்த்தை) |
| 17. | க | கபிலன் | |
| 18. | க்க(KHA) | க்கபதி | வலது புஜத்தின் |
| 19. | க (GA) | கருடன் | ஸந்திகளிலும் அந்தத்தி |
| 20. | க்க (GHA) | க்கர்மன் | லும்இவை ஐந்து |
| 21. | ங | ஙஸாரன் | |
| 22. | ச (CHA) | சார்வங்கன் | |
| 23. | ச்ச | சந்தோகம்யன் | இடது புஜத்தின் |
| 24. | ஜ | ஜனுர்த்தனன் | ஸந்திக்களிலும் அந்தத்தி |
| 25. | ஜ்ஜ (JJA) | ஜாடிதாரி | லும் இவை ஐந்து |
| 26. | [illegible] | [illegible] | |

| | | | |
|---|---|---|---|
| 27. | ட | டங்கி | |
| 28. | ட்ட (TTA) | ட்டலநன் | வலது பாதத்தின் |
| 29. | ட (DA) | டாகன் | ஸந்திக்களிலும் அந்தத்தி |
| 30. | ட (DDA) | ட்டரீ | லும் இவை ஐந்து |
| 31. | ண | ணுத்மா | |
| 32. | த (THA) | தாரன் | |
| 33. | த | த்தபன் | இடது பாதத்தின் |
| 34. | த (DA) | தண்டி | ஸந்திக்களிலும் அந்தத்தி |
| 35. | த (DHA) | த்தன்வி | லும் இவை ஐந்து |
| 36. | ந | நம்யன் | |
| 37. | ப | பரன் | வலது பாரிசுவம் |
| 38. | ப்ப (PPA) | ப்பலீ | இடது பாரிசுவம் |
| 39. | ப (BA) | பலீ | பிருஷ்டபாகம் |
| 40. | ப்ப (BAIA) | ப்பகன் | (குஹ்யம்) |
| 41. | ம | மனு | (நாபி) |
| 42. | ய | யக்ஞும் | (ஹிருதயம்) |
| 43. | ர | ராமன் | (த்வக்கு) |
| 44. | ல | லக்ஷ்மீபதி | (சர்மம்) |
| 45. | வ | வராஹன் | (மாம்சம்) |
| 46. | ச (SHA) | சாந்தஸம்வித் | (ரக்தம்) |
| 47. | ஷ | ஷட்குணன் | (மேதஸ்) |
| 48. | ஸ | ஸாராத்மா | (மஜ்ஜை) |
| 49. | ஹ | ஹம்ஸன் | (அஸ்தி) |
| 50. | ள | ளாளுகன் | (ப்ராணன்) |
| 51. | க்ஷ | லக்ஷ்மீந்ருஸிம்ஹன் | (ஜீவன்) |

இவ்வாறு குரு நமஸ்காரம், காசுத்தி, தத்வ நியாஸம், மாத்ருகா நியாஸம் இவைகளைச்செய்து பரிசுத்தப்படுத்திக்கொண்டு — வேதமாதாவான காயத்திரியை ஜபிக்கவேண்டும். அதற்கு முன்னுடி சிரஸ்ஸுக்கு கொண்டுபோயிருந்த பகவானை ஸுஷும்னை நாடி வழியாய் ஹிருதயத்திற்கு கொண்டுவரவேண்டும். புண்ய பலத்தைத்தரும் பகவத்ரூப விசேஷத்தை அங்கு தியானிக்கவேண்டும். வலது குக்ஷியில் ஸ்தாபிக்க வேண்டும். ப்ராணுயாமம் செய்து காயத்ரி மந்திர ஜபத்திற்கு அங்க நியாஸாதிகளைச் செய்யவேண்டும். காயத்ரி மேலே சொன்னபடி விச்



வாமித்ர காயத்ரி ப்ரம்ம காயத்ரி என்று இருவகைப்படும். ஸந்தியா வந்தனத்திற்குஅங்க பூதமாயுள்ளது விசுவாமித்திர காயத்ரியாகும். மகா மந்திரங்களில் சேர்ந்தது பிரம்மகாயத்ரி. ப்ரம்ம காயத்திரியை ஜப மாலையைக்கொண்டு செய்வது வழக்கம். விச்வாமித்திர காயத்ரியை கையிலுள்ளகணுக்களை எண்ணித்தான் ஜபிப்பது சிஷ்டாசாரம். அப்படியே வைஷ்ணவ நூல்கள் அறிவிக்கின்றன. நடுவிரல் மோதிரவிரல் இவைகளின் மத்ய கணு ரேகை மேரு எனப்படும். இவைகளை விட்டு இவைகளுக்கு ப்ரதக்ஷிணமாக மோதிரவிரலின் கடைசிகணுவை ஆரம்பித்து பாம்பு விரல் கடைசி கணு முடிய ஜபிக்கவேண்டும் என்று சௌனகர் அறிவிக்கிறுர். ஜபமாலையைக்கொண்டு காயத்ரியை ஜபிப்பது என்பது சிவபக்தர்களின் விஷயமென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. காலையில் கையை கீழே தனித்து தன் தொப்பிளின் ஸமீபத்திலும், மத்யான்ஹத்தில் ஹிருதயத்தின் பக்கத்திலும், ஸாயங்காலத்தில் முகத்தின் நடுப் பக்கத்திலும் தூக்கி வைத்துக்கொண்டு ஜபிப்பது உத்தமமாகும். அல்லது காலையில் கையை உயர்த்தி வைத்துக்கொண்டும் ஸாயங்காலத்தில் தணித்து வைத்துக்கொண்டும் மத்யான்ஹத்தில் இரு புஜங்களின் நடுப்பக்கத்தில்வைத்துக்கொண்டும் ஜபிக்கலாம். ஆனால்கையில் விரல்கள் சேர்த்து வைத்துக்கொள்ளப்படவேண்டும், விரல்கள் தனித்தனியே விலாசமாக வைக்கப்பட்டிருந்தால் அந்த துவாரத்தின் வழியாய் ஜபம் செய்துகொண்டிருப்பது ஒழிகிப்போகுமென்று சொல்லப்படுகிறது. நாபிக்கும் கீழே கையை வைத்துக்கொண்டு ஜபித்தால் ஜபத்தின் பலன் பிசாசுகளுக்குப்போய்ச்சேரும். காலம் தவறி மத்யத்தில் கையை வைத்துக்கொண்டு ஜபித்தால் அது ராக்ஷஸர்களுக்குப் ப்ரீதிகரமான ஜபமாகும். கையை கட்டிவிட்டு ஜபித்தால் அந்த ஜபம் கந்தர்வர்களுக்கு ப்ரீதிகரமாகும். கையை உயரத்தூக்கி செய்யும் ஜபம் தேவர்களுக்கு ப்ரீதிகரமான ஜபம் என்று மற்றொரு நூல் அறிவிக்கிறது. மனோவசியம், சௌசம், மௌனம், மந்திரார்த்தத்தை தியானிப்பது, வேறு இடத்தில் மனமில்லாமலிருப்பது, ஆலசியமில்லாமலிருப்பது இவைகள்ஜபத்திற்கு பலனைக் கொடுக்கக்கூடியவைகளாகின்றன. ஹோமம், தானம் பெறுதல், தானம் செய்தல், போஜனம் ஆசமனம் ஜபம் இவைகளை முழங்காலுக்கு வெளியில் கையை வைத்துக்கொண்டு செய்யலாகாது, செய்யும்பொழுது கட்டைவிரல் தனியாக இருக்கலாகாது. இதர விரல்களுடன் சேர்த்து வைத்துக்கொள்ளவேண்டும். பவித்ரமில்லாமலும் பஞ்ச கச்சமுள்ளதாய் உத்தரீயக் கட்டையுள்ள வஸ்திரம் உடுக்கா

ஜபம் நிஷ்பலமே ஆகும். நாய் சூத்ரன், பதிதன், முதலானவர்களையும் பன்றி, ரஜஸ்வலை ஸ்திரீ இவர்களையும் கண்டால் ஆசமனம் செய்ய வேண்டும், தொட்டால் ஸ்நானம் செய்யவேண்டும். ஸ்நானம் போஜனம் ஜபம் ஹோமம் தந்ததாவனம், ஜலோத் ஸர்ஜனம் மலோத் ஸர்ஜனம் ஆகிய இந்த ஏழுகாலங்களில் மௌனம் மிகவும் அவசியம். காயத்ரி மந்திரத்தின் மூன்று பாதங்களை பிரித்துச்சொல்லாமல் ஜபித்தால் ப்ரம்மஹத்யை பாபம் வந்துசேரும், தத்ஸவிதுர் வரேண்யம் என்பது ஓர் பாதம்; பர்கோதேவஸ்ய தீமஹி என்பது இரண்டாவதுபாதம்; தியோயோன: ப்ரசோதயாத் என்பது மூன்றாவது பாதம்; ஸம்புட ஓம்கார காயத்ரி, ஏக ஓம்கார காயத்ரி, ஷட் ஓம்கார காயத்ரி என்று மூன்றுவகை, ஒரு ஓம்காரமுள்ள காயத்ரி தான் கிருகஸ்தாசிரமிகளுக்கும் பிரம்மசாரிகளுக்கும் ஏற்றது, இவர்கள் கடைசியில் ப்ரணவத்தைச் சேர்த்துச் சொன்னால் விருத்தியை அடைய மாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மற்ற இரண்டு காயத்ரிகளை ஸன்யாஸி ஜபிக்கவேண்டியதாகும். ஆரம்பத்திலும் முடிவிலும் ஓம் என்பதை தனித்துச் சேர்த்துக்கொண்டால் ஸம்புட ஓம்கார காயத்ரி யாகிறது. அதாவது ஓம் பூர்புவஸ்வ: தத்ஸவிதுர்பர்கோதேவஸ்ய தீமஹி தியோ யோன: ப்ரசோதயாத் ஆறு ஓம்காரமுள்ள காதித்ரியாவது ஓம் ஓம்பூ: ஓம்புவ: ஓம் ஸ்வ: ஓம் தத்ஸவிதுர் வரேண்யம் பர்கோதேவஸ்ய தீமஹி தியோ யோன: ப்ரசோதயாத் ஓம். ஜபம் என்பதில் ஜ என்றால் ஜன்ம விச்சேதமும் ப என்றால் பாபநாசமும் ஏற்பட்டு ஜன்மமும் பாபமும் தொலைவதைக்கொண்டு ஜபமெனப்படுகிறது என்று ஆக்னேய புராணம் அறிவிக்கிறது. காயந்தம் த்ராயதே என்று சொல்லுகிறவரை சம்ரக்ஷிப்பதைக்கொண்டு காயத்ரி என்று ஞானிகள் கூறுவதாயும் அறிவிக்கிறது, ஜபத்தில் மூன்றுவகை உண்டு, வாசிகம் உபாம்சு மானஸிகம் என்று மூன்று. ஸ்வரங்களுடன் அக்ஷரங்கள் பாதங்கள் இவைகளை வியக்தமாய் சொல்லிக்கொண்டு ஜபிப்பது மூன்றாவது தரமான வாசிக ஜபமாகும், உதடுகளை அசக்கிக்கொண்டு ஸ்வல்பம் சப்தம் செய்துகொண்டு உபாயமாய் உச்சரித்து செய்யும் ஜபம் கீழே சொன்னதற்கு மேற்பட்டதான இரண்டாவது பக்ஷமாகிய உபாம்சு ஜபமாகும், மனதில் தியானத்துடன், அக்ஷராதிகளைச் சொல்லுவதும் தெரியாமல் மனதாலேயே ஜபிப்பதும் உத்தம பக்ஷமான மானஸ ஜபமாகும். ஜப காலத்தில் மூக்கின் நுனியை மட்டில் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். பேசுவதும் சப்தங்களைக்கேட்பதும் நடமாடுவதும் ஊஞ்சல்பலகை முதலிய அசையும் ஆஸனத்தில் உட்கார்ந்திருப்பதும்



அதிகம் உயர்ந்தான நாற்காலி பெஞ்சு முதலிய ஆஸனத்திலிருப்பதும் மேல்மாளிகை முதலான அந்தரிக்ஷத்தில் அமர்ந்திரும்பதும் ஜபத்திற்கு தகாது, ஜபத்தை கணக்கிடாமல் செய்வதும் பவித்ரம் தரிக்காமல் செய்வதும் நிஷ்பலமே. சரீரத்தில் உபாதி இல்லாமலிருந்து ஸ்நானம் செய்யாமல் காயத்ரியை ஜபிக்கும் பக்ஷத்தில் அதற்கு ப்ராயச்சித்தமாக 100 தடவை காயத்ரியை அதிகம் ஜபிக்கவேண்டும். இல்லாவிடில் வைசியனையும் க்ஷயரோக முள்ளவனையும் பிறப்பானென்றும் அதற்காக ஸ்நானம் செய்தே தன்சக்திக்குத் தகுந்தபடி காயத்ரியை ஜபிக்க வேண்டுமென்றும் ஆக்னேயபுராணம் ஸ்பஷ்டமாய் அறிவிக்கிறது.

## காயத்திரி.

காயத்ரியால் ஸ்தோத்திரம் செய்யப்படுகிறவர் ஸாக்ஷாத் ஸ்ரீ விஷ்ணுதான் என்பது ஸ்ரீபகவத்பாதாளின் மதமாகும். ஸூரியனென்றும் காயத்ரி தேவதையென்றும் இதரர்கள் அபிப்ராயப்படுவது சரியல்ல என்று தீர்மானித்துக்கொள்ளவேண்டும். அர்க்யம் கொடுக்கும்பொழுது காயத்ரி மந்திரத்தால் சூரியனுக்கு ஏற்பட்டிருந்த கஷ்டம் நிவிருத்தியாகும்பொழுது அந்த மந்திரம் சூரியனையே குறிக்கஇடமில்லை. அதனால்தான் ஸ்ரீபகவத்பாதாள் ஸ்பஷ்டமாய் நரஸிம்ஹபுராணத்திலுள்ள வாக்யத்தை இந்த காயத்ரி மந்திரத்திற்கு தியான சுலோகமாய் கூறியிருக்கிறார். அந்த தியானமாவது:— தியேய: ஸதா ஸவித்ரு மண்டல மத்யவர்த்தி நாராயண: ஸரஸிஜாஸன ஸன்னிவிஷ்ட:। கேயூரவான் மகர குண்டலவான் கிரீடி, ஹாரீ, ஹிரன்மய வபு: திருத சங்க சக்ர:॥ (தொடரும்.)

---

## மகாலட்சுமி.

---

(முன் 308ம் பக்கம் தொடர்ச்சி.)

(9) மகால்ட்சுமி ஸம்ஸாரியாய் இல்லாததால் அவளுக்கு ஆகவேண்டியது ஒன்று மில்லாதிருப்பதன் நிமித்தம், அவள் பகவானை உபாஸனை செய்வதில்லையோ என்றால், அவள் அவ்வாறு இருப்பினும் பகவானிடமுள்ள நிர்நிமித்தமானதாயுள்ள ஸர்வாதிசயமான பக்திக்கு வசமாகி அவள் செய்துவரும் உபாஸனை பூஜை இவைகளுக்கு குறைவில்லை என்று ஓம் ஆதராத் அலோப:

என்று பிரம்மஸூஸ்த்ரம் அறிவிருக்கிறது. இவ்வாறே பிருஹத் தந்திரத்தில் மகாலட்சுமி எப்போதும் நித்யமுக்தளாய் தன் இஷ்டங்களை எல்லாம் அடைந்தவளாயிருப்பினும் எப்பொழுதும் ஸ்ரீ விஷ்ணுவை உபாஸித்து வருகிறாள்; இப்படித்தான் விஷ்ணு பக்தனும் நிர்நிமித்தமாய் விஷ்ணுவை உபாஸிப்பவனாய் இருக்கவேண்டும் என்று வசனமும் காணப்படுகிறது.

(10) மகாலட்சுமி நித்யமுக்தளாயிருப்பதற்கு காரணமில்லாததால் அவ்வாறு நித்யமுக்தளாய் இருக்கிறாள் என்பது பொருந்தாதென்றும், அவள் அஸ்வதந்திரமாய் இருப்பதால் தானாகவே அவ்வாறு இருப்பதாய் சொல்ல முடியாதென்றும் சந்தேகம் வந்தால், அதற்கு ஸ்ரீ வேதவியாஸர், ஓம் உபஸ்திதே: தத் வசனாத், என்று நிர்ணயம் செய்தார். அதாவது அனாதி அனந்த காலமாய் மகாலட்சுமி பகவானை விட்டு தனியாய் இல்லாமல் பகவானுடைய ப்ரஸாதத்திற்கு பாத்திரமாய் இருப்பதால் அவள் நித்ய முக்தளாய் இருப்பதற்கு பகவானுடைய ப்ரஸாதமே காரணமாகிறது. அவ்வாறே சுருதி வசனமும் இருந்து வருகிறது என்றார். கௌபவன சுருதியில் "த்வாவேதௌ அநாதி நித்யௌ அநாதியுக்தௌ நித்யமுக்தௌ அநாதி கிருதௌ நித்ய கிருதௌ, யோயம்பரம: யாசப்ரகிருதீ, ரமதேஹ்யஸ்யாம் பரம:, ரமதேஹ்யஸ்மின் ப்ரகிருதி:, ஸ்வஸ்மின் ஹி ரமதே பரம:, நஸ்வஸ்மின் ப்ரகிருதி:, அத: ஏனமாஹு: பரம:" அதாவது மகாலட்சுமியாகிய ப்ரகிருதியும் மகா விஷ்ணுவாகிய பரமனும் அநாதி அனந்தகாலமாய் இருப்பவர்கள், சரீரத்துடனும் அநாதி காலமாய் சேர்ந்திருப்பவர்கள். அநாதி காலமாய் துக்க ஸம்பந்தமில்லாத முக்தர்கள்: எப்போதுமே பூர்ணர்கள். மேலும் பரமன் ப்ரகிருதியிடம் ரமணம் செய்கிறார். ப்ரகிருதி பரமனிடம் ரமணம் செய்கிறாள். இதனால் இவ்விருவர்களும் ஸமானமானவர்களா என்றால் பரமன் என்ற பெயரே பகவான் உத்தமர் என்றறிவிக்கிறது. ஏனெனில் "ஸ்வஸ்மின் ஹி ரமதே பரம:" ப்ரகிருதியிடம் இவர் ரமணம் செய்யும் பொழுதும் அந்த ப்ரகிருதி தேவியிடமுள்ள தன்னிடத்திலேயேதான் பகவான் ரமணம் செய்கிறார். ஆனால் அப்படி "ந ஸ்வஸ்மின் ப்ரகிருதி:" ப்ரகிருதி தன்னிடம் ரமணம் செய்வ



308728

தில்லை. பகவானிடத்தில் தான் ரமணம் செய்கிறாள். ஆகவே இந்தக் காரணத்தைக்கொண்டு "அத ஏன மாஹு: பரம:" மகா விஷ்ணு மகா லட்சுமியைவிட உத்தமன் பரமன் என்று சொல்லப்படுகிறார் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது இதனால் பகவத் ப்ரஸாதத்தால் தான் மஹா லட்சுமிக்கு நித்ய முக்தளாயிருக்கும் தன்மை ஏற்பட்டிருப்பதாய் தெரியவருகிறது.

(11) அப்படியே நான்காவது அத்யாயம் இரண்டாவது பாதம் 6வது அதிகரணம் 8வது சூத்திரத்தில் அதாவது "ஓம் தத பீதே: ஸம்ஸாரவ்யபதேசாத்" என்பதில் பரமன் ப்ரகிருதிகளாகிய மகாவிஷ்ணுவும் மகாலட்சுமி இவ்விருவர்களும் தேசத்தாலும் காலத்தாலும் ஒரே மாதிரி வ்யாப்தியை அடைந்திருப்பதைக்கொண்டு ஸமானர்களாய் இருந்தாலும், ஸம்ஸாரத்தினின்றும் விடுவிப்பவர் மகா விஷ்ணு ஒருவரே ஆனதால், மகாலட்சுமியை விட அவர் தான் பரமர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த ப்ரகிருதியிடம் அபீதே: லயமடைவதால் ஸம்ஸாரம் ஏற்படுகிறது என்று சொல்லப்பட்டிருப்பதைக்கொண்டு இவ்விருவர்களும் அத்யந்தம் ஸமானர்களென்று சொல்லக்கூடாது என்று இந்த ஸூத்ரம் எச்சரிக்கிறது. அவ்வாறே ஸௌபர்ண சுருதியில் "ஸமாவேதௌ ப்ரகிருதிஸ்ச பரமஸ்ச நித்யௌ ஸர்வகதௌ நித்ய முக்தௌ அஸமாவேதௌ ப்ரகிருதிஸ்ச பரமஸ்ச, விலீனோஹி ப்ரகிருதௌ ஸம்ஸாரமேதி, விலீன: பரமே ஹ்யம்ருதத்வமேதி" என்று காணப்படுகிறது. ப்ரகிருதியாகிய மகாலட்சுமியும் பரமனாகிய மகாவிஷ்ணுவும் ஸமானர்கள். சரீரத்தாலும் எப்போதும் இருப்பவர்கள். எல்லா இடங்களிலேயும் இருப்பவர்கள். எப்போதும் முக்தர்களாய் ஸம்ஸார பந்தமில்லாதவர்கள்தான். ஆயினும் "அஸமௌ ஏதௌ" இவ்விருவர்களும் அத்யந்தம் எல்லா விஷயத்திலும் ஸமானர்களன்று. ஏனெனில் ப்ரகிருதியிடம் இதரான் கண்ணுக்கு புலப்படாமல் லயமடைகிறவன் ஸம்ஸாரத்தை அதாவது பந்தத்தை அடைகிறான். பரமனிடம் லயமடைகிறவன் பந்தத்தை அடைவதில்லை. ஆனால் பந்தத்தினின்றும் விடுதலையே அடைகிறான் என்று ஸ்பஷ்டமாய் அறிவிக்கப்பட்

டிருக்கிறது. இதனாலும் மகாலட்சுமி மகாவிஷ்ணுவை விட குறைந்தவளென்று ஏற்படுகிறது.

(12) மற்றொரு காரணத்தாலும் ப்ரகிருதி புருஷர்களுக்கு ஸர்வஸாம்யம் சொல்லத்தகுந்ததாயில்லை என்று பிரம்ம ஸூத்ரகாரர் "ஓம் ஸூக்ஷ்மம் ப்ரமாணதஸ்ச ததோபலப்தே:" என்று அறிவித்தார் என்றால் பரப்ரம்மாகிய மகாவிஷ்ணு ப்ரகிருதியாகிய மகாலட்சுமியைவிட சூக்ஷமமானவர். அவளுடைய ஞானம் ஆனந்தம் முதலானவைகளை விட அதிகமான ஞானனந்தாதிகளைக் கொண்டவர். ஆதலால் ப்ரகிருதி அவருக்கு ஸமானமாய் ஆகமாட்டாள். அப்படியேதான் வேதத்தில் காணப்படுகிறது என்று அறிவித்தார். இதற்கு ஆதாரமாய் ஸ்ரீ பகவத்பாதாள் "ஸர்வத: ப்ரகிருதி: ஸூக்ஷ்மா ப்ரகிருதே: பரமேச்வர:] ஞானனந்தௌ ததைச்வரியம் குணஸ்சான்யேதிகா: ப்ரபோ:" என்று தாசுருதியை காட்டுகிறார். இங்கு சொல்லப்படுவதாவது, பிரம்மாதிகளைவிட ப்ரகிருதியான ஸ்ரீதத்வம் சூக்ஷமமானது. அந்த ஸ்ரீதத்வத்தைவிட பரமேசுவரரான மகாவிஷ்ணு சூக்ஷமமானவர். மேலும் மகாவிஷ்ணுவுக்கு ப்ரகிருதியை விட ஞானனந்தங்களும் அணிமாதி ஐசுவரியமும் பலம் முதலியவைகளும், குணங்கள் முதலான தர்மங்களும் அதிகமானவைகள். இதனாலும் மகாலட்சுமியை விட மகாவிஷ்ணுவுக்கு உத்தமத்வமும் சொல்லப்பட்டிருக்கிறது. (தொடரும்)

---

## விசேஷ தினங்கள்.

ஆஷாட மாஸம்.

| | | |
|---|---|---|
| 12—7—36 | சுக்ரவாரம் | ஏகாதசி உப. சாதுர்மாஸ்ய விரதம் ஆரம்பம். |
| 13—7—36 | சனிவாரம் | த்வாதசி. சாகவ்ரதம் ஆரம்பம். |
| 16—7—36 | மங்களவாரம் | பௌர்ணமி, விஷ்ணு உப, தக்ஷிணயன புண்யகாலம் மணி 5–48க்கு மேல் |
| 17—7—36 | புதவாரம் | சிரவணம் உப. விஷ்ணு ப உப. |
| 20--7—36 | சனிவாரம் | ஸ்ரீ ஜயதீர்த்தர் (டீகாசாரியாள்.) 668 வது வருஷத்திய புண்யதினம். |
| 26—7—36 | சுக்ரவாரம் | ஏகாதசி உப. |
| 29—7—36 | சோமவாரம் | தர்சம், சோமவார அமாவாசை. |
| 30—7—36 | மங்களவாரம் | விஷ்ணு ப உப. |

# மாத்வமித்திரன்.

## 5-வது வாலியம் (1932–1933)

பொருளடக்கம்.

*முன்தொடர்ச்சி


| லக்கம். | விஷயங்கள். | பக்கங்கள். |
|---|---|---|
| 1. | ஸ்ரீமகாபாரத தாத்பரிய நிர்ணயம் * (ஸ்ரீமத்வாசாரியார் இயற்றியது) | 1 (அத் 14 சுலோ 45) 33 (அ 14 சு 88; 15 அ 1 சு) 65 (15 அ 16 சு) 97 (15 அ 64 சு; 16 அ 1 சு; 17 அ 1 சு) 145 (17 அ 5 சு) 173 (17 அ 79 சு) 217 (17 அ 116 சு) 225 (17 அ 150 சு) 249 (17 அ 217 சு) 291 (17 அ 289 சு; 18 அ 1 சு) 333 (18 அ 36 சு) 345 (18 அ 71 சு) |
| 2. | மணிமஞ்ஜரி* (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்) | 17 (4 ஸ 31 சு) 49 (5 ஸ 1 சு) 81 (5 ஸ 10 சு) 111 (5 ஸ 16 சு) 135 (5 ஸ 37 சு) 241 (6 ஸ 1சு) 261 (6 ஸ 7 சு) 299 (6 ஸ 7 சு) 325 (6 ஸ 21 சு) 369 (6 ஸ 34 சு). |
| 3. | ஸ்ரீமத்வமதகிரந்தங்களின் விபரம்.* | (15, 43, 79, 109, 139 (மொத்தம் 790 கிரந்தங்கள்) |
| 4. | *சங்கரலீலா விலாஸம் (ஸ்ரீமான் H. சுப்புரூவ் M. A.) | 29, 53, 85, 123, 153, 233, 257, 297, 363 |
| 5. | *காடகோப நிஷத் | 57 (1 அ 3 வ 10 வா; 2 அ 1 வ 1 வா) 89 (2 அ 1 வ 3 வா; 2 அ 2 வ 1 வா) 121 (2 அ 2 வ 2 வா) 155 (2 அ 2 வ 7 வா) 165 (2 அ 2 வ 14; 2 அ 3 வ 1 வா) 215 (2 அ 3 வ 14 வா) |
| 6. | தலவகார உபநிஷத் | 317 (1 க) 366 (1 சு) |
| 7. | ப்ரமாண சந்திரிகை (ஸ்ரீமான் M. ராமராவ்) | 25, 77, [159, 237. |
| 8. | *ஸ்ரீவியாஸராஜஸ்வாமிகளின் சரித்திரம் | 9, 41 |
| 9. | ஆசாரமாலே | 61, 164, 245, 356 |
| 10. | *ஓர்கண்டனம் (ஆரியதர்மம் பத்திரிகை நிரூபத்திற்கு) (ஸ்ரீமான் C. T. ராமசந்திராசாரியார் எழுதியது) | 13, 45, |

11. சண்டாள ஸம்பர்க்கம் தகாது
என்பதற்கு பிரமாணங்கள் 94, 117, 157, 169, 303
12. *ஜகந்நாததாஸர் சரித்திரம்
(ஸ்ரீமான் மைசூர் நரஹரிதாஸர்) 349
13. *துவாதசஸ்தோத்திரம் (ஸ்ரீமத்வாசாரியார்) 351
14. துவாதசஸ்தோத்திரம் தாத்பரியச் சுருக்கம் 352
15. துளசி மகிமை
(ஸ்ரீமான் காபே ஸ்ரீனிவாஸாசாரியார் B. A.,) 265
16. துளசிபூஜை கதை 281
17. துளசியின் மகாத்மியம்
18 புராணங்களில் சொல்லப்பட்டிருப்பது 315
18. ஸ்ரீஸத்யநாராயணவ்ரத கதை
73 (அத் 1-2) 105 (அத் 3) 129 (அத்4-5)
19. வைசாக மாஸ மகாத்மியம் 283
20. போஜன பதார்த்தங்களின் அபிமானி தேவதைகளின்
விவரம். 125
21. நைவேத்ய பதார்த்தங்களின் ஸாரம் அஸாரம் இன்ன
தென்பதின் விவரம் 313
22. கும்பகோணத்தின் மகாத்மியம் 177, 193
23. மகாமகத்தின் வைபவம் 276
24. கும்பகோணத்தின் ஆலயதீர்த்தங்களின் வழிகாட்டி 213
25. ஸ்ரீபகவத்கீதை துவைதபரம்தான் 30, 47
26. ஜயதீர்த்தர் ராகவேந்திரர் முதலியோர் தேவாம்சமே
என்று பல நிரூபங்கள் 209, 272, 307, 319
27. சிறுவர்களுக்கான கதை
மோக்ஷத்தை அளிப்பவர் ஸ்ரீஹரியே 161
28. குப்பகோணம் ஸ்ரீசங்கராசாரியார் ஸ்வாமிகளால் "யத்ர
ஹி துவைத மிவ பவதி" என்னும் சுருதிக்கு உபன்யாஸம்
செய்த அர்த்தத்திற்கு மறுப்பு 127, 142
29. விமோக்ஷசிர்ாத்த விஷயமாய் ப்ரச்னமும் உத்தரமும் 63
30. பீமசேனவிஜயம் 360
31. ஸத்வைஷ்ணவர்களுக்கு வேண்டுகோள் 373
32. திருப்பதியில் ஸ்ரீவெங்கடாசலபதி மறைந்துவிட்டாராம் 93
33. திருப்பதிஸபைகளின் நடவடிக்கைகள் 185
34. மதிப்புரை 27, 31, 93, 94, 191, 224, 268,
35. செய்திகள் 28, 62, 126, 189, 221, 247, 270, 311
339, 375
36. அறிக்கைகள் விளம்பரங்கள் முதலியது. 26, 223, 337, 372

# மாத்வமித்திரன்.

## 6வது வாலியம். (1933—1934)

## பொருளடக்கம்.

* முன்தொடர்ச்சி.

விஷயம். பக்கங்கள்.

1 ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.*
(ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றியது.)
1 (அ 18 சு 100) 33 (அ 18 சு 163; அ 19
சு 1) 65 (அ 19 சு 31) 97 (அ 19 சு 68)
145 (அ 19 சு 105) 174 (அ 19 சு 146)
193 (அ 19 சு 165) 229 (அ 19 சு 195;
அ 20 சு 1) 257 (அ 20 சு 13) 291 (அ
20 சு 53) 324 (அ 20 சு 90) 353 (அ 20
சு 145)
2 மணிமஞ்ஜரி *
[ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார்.]
15 (6 ஸ 49 சு; 7 ஸ 1 சு) 45 (7 ஸ 9 சு)
85 (7 ஸ 22 சு; 8 ஸ 1 சு) 109 (8ஸ 16சு)
137 (8 ஸ 33 சு)
3 ஸ்ரீ மத்வ விஜயம்
[ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார்.]
181 (1 ஸ 1 சு) 204 (1 ஸ 6 சு) 241 (1ஸ
29 சு) 275 (1 ஸ 42 சு) 303 (1 ஸ 55 சு;
2 ஸ 1 சு) 345 (2ஸ 13சு) 364 (2ஸ 23சு)
4 ஆசாரமாலை * 11, 53, 89, 117, 140, 170, 210, 265,
333, 363.
5 பீமசேன விஜயம். * 28, 49, 77, 121, 178, 213,
286, 311, 337, 372.
6 ஸ்ரீ வாதிராஜஸ்வாமிகளின் 57, 73, 53. 201, 237,
அற்புத சரித்திரம்.* 272, 342.
7 சங்கர லீலா விலாஸம்.*
(ஸ்ரீமான் H. சுப்புராவ் M. A.,) 25, 41, 81, 113,
207, 245, 279, 299.
8 தலவகார உபநிஷத்.* 21 (2 கண்) .124 (2, 3க) 132
(3, 4).

9 துளசியின் மகிமை.*
பதினெண் புராணங்களில்
சொல்லப்பட்டிருப்பது. 23.
10 ப்ரமாண சந்திரிகை.* 19.
11 ஸ்வப்ன பலன். 115, 143, 185, 247, 269, 317.
12 விதவா விவாஹ கண்டனம் 281, 307, 375.
13 ஆசௌச விபரம் (தர்ம ஸிந்து) 340, 368
14 வேதாந்த நுணுக்குகள். 61, 91,
15 சதாபாதகங்கள். 129.
16 வரலக்ஷ்மி விரதக்கதை. 9.
17 ஸ்ரீ ரகூத்தம ஸ்வாமிகளின் சரிதை. 105.
18 ஸம்க்ஷேப விஷ்ணு ஸஹஸ்ர நாமம். 157.
19 ப்ரம்மபார ஸ்தோத்திரம். 163.
20 சிவஸ்துதி. (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியர்) 166.
21 சந்திர சூடசிவசங்கர என்னும் தாஸர்
பதத்தின் அர்த்தம் 225.
22 போளிப்பண்டிகையின் மர்மம். 250.
23 ஸ்ரீ வெங்கடாசலபதி பணத்தைப்
பறிப்பதேன்? 289.
24 வாஸுதேவன் என்னும் நாமத்தின் பல
அர்த்தங்கள். 290.
25 பசுவின் மகிமை. 321.
26 மௌன விரதத்தின் மகிமை. 323.
27 ஸ்வகர்மம் செய்யவேண்டியதைப்பற்றி
கிருஷ்ணார்ஜுன ஸம்வாதம். 161.
28 விரோதம் (ஏகாதசி உபவாசம், வன
போஜன விஷயம்.) 159.
29 வாசகர்களுக்கு விளுக்கள். 256, 284.
30 செய்திகள். 31, 94, 127, 160, 216, 255, 315, 382.
31 ப்ரத்யக்ஷ பசு யக்ஞத்தைப் பற்றி தகரார். 348.
32 ஸ்ரீ விஜயீந்திரஸ்வாமிகளின் மகிமை
வெளிக்கண்டது. 351.
33 மதிப்புரை. 192, 223, 378.
34 அறிக்கை விளம்பரம் 32, 95, 26, 224, 285, 352,
முதலியது. 381.
35 வாயுகுமாரரின் பராக்கிரமச்
செயல்கள் கண்டது. 189.

# மாத்வ மித்திரன்.

## 7வது வாலியம் (1934—1935.)

### பொருளடக்கம்.

* முன்தொடர்ச்சி.

விஷயம். பக்கங்கள்.
1. மகாபாரத தாத்பரிய நிர்ணயம். * (ஸ்ரீ மத்வாசாரியார்.) 1 (அ 20 சு 187); 47 (அ 20 சு 234; அ 21 சு 1); 83 (அ 21 சு 33) 97 (அ 21 சு 65) 129 (அ 21 சு 133) 161 (அ 21 சு 191) 193 (அ 21 சு 252) 225 (அ 21 சு 311); 256 A (அ 21 சு 391; அ 22 சு 1) 288 (அ 22 சு 26) 320 (அ 22 சு 75) 352 (அ 22 சு 153).
2. ஸ்ரீ மத்வவிஜயம். * (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்.) 13 (ஸ 2 சு 39) 40 (ஸ 3 சு 1) 79 (ஸ 3 சு 21) 109 (ஸ 3 சு 39) 140 (ஸ 3 சு 54) 173 (ஸ 4 சு 15) 201 (ஸ 4 சு 30) 239 (ஸ 4 சு 47; ஸ 5 சு 1) 275 (ஸ 5 சு 5) 300 [ஸ 5 சு 19] 360 (ஸ 5 சு 35).
3. ஆசாரமாலை. * 21, 55, 112, 190, 205, 296, 336, 368.
4. ஸ்ரீ வாதிராஜஸ்வாமிகளின் சரித்திரம். * 9, 36, 105, 169, 209, 264, 308, 357.
5. சங்கரலீலா விலாசம்.* [ஸ்ரீமான் H சுப்புராவ் M. A.,] 25, 76, 137, 242, 280, 319, 328.
6. ஸ்ரீ பீமசேன விஜயம் * 18, 71, 127.
7. ஸரஸபாரதி. (மகாலட்சுமி விஷயம்) (ஸ்ரீ வாதிராஜஸ்வாமிகள்.) 29, 33, 211.
8. ஸ்ரீ கிருஷ்ண ருக்மணி ப்ரேம கலகம். [தசமஸ்கந்த பாகவதம்.] 65, 118, 145, 183.
9. மகாலட்சுமி பகவானுக்கு ஸமமானவள் என்னும் ஸ்ரீ வைஷ்ணவர்களின்மதத்தின் மீது கண்டனம். 268, 304, 372.
10. ஆசௌச விபரம். * [தர்ம ஸிந்து.] 44, 95.
11. விதவாவிவாக கண்டனம்.* 124, 154, 235, 272.
12. பிராம்மண்யம். 151.
13. ரமா நைவேத்தியம். 89.

14, ஸ்ரீ கிருஷ்ணார்பணமஸ்து என்னும் விஷயம். 115.
15. பகவத் அவதாரங்கள். 177.
16. கிரஹண உபவாஸத்தகரார் 222.
17. கிரஹண உபவாசபிரமாணங்கள் 245.
18. வ்யாஸேன வ்யுப்தபீஜ:‌| என்னும் சுலோகத்தின் அர்த்தம். 58.
19. காவேரி புஷ்காத்தின் விபரம். 60.
20. ஸம்வத்ஸரப் பண்டிகை கொண்டாட வேண்டிய விதம் 284.
21. ஸம்வத்ஸரத்தில் செய்ய வேண்டிய விரதங்களின் விபரமும் அவைகளின் விசேஷங்களும். 311.
22, அரசன் விஷ்ணு அம்சம் என்பதற்கு பிரமாணங்கள். 332.
23. ஜார்ஜ் மன்னரின் வெள்ளித்திருவிழாவைக்குறித்து ஆசீர்வாத சுலோகங்கள். 336.
24. ஹரிபஜனே அகாலத்தில் கூடாதென்பதற்கு கோர்ட்டு தீர்ப்பு 92.
25. நிர்வாணம் நாகரீகமா? 93.
26. திருப்பதி சபையின்மீது கோர்ட்டு தீர்ப்பு. 219.
27. ஸ்ரீ ராகவேந்திரரின் மகாத்மியக் குறிப்புகள். 223.
28. ஸ்ரீ நரஸிம்ஹர் சிவனின் சரபாவதாரத்தால் கொல்லப்படவில்லை என்பதற்கு ஸ்ரீ விஜயீந்திர ஸ்வாமிகளின் வாதம். 340.
29. ஓர் மாத்வமாதின் வைராக்யச்செயல். 346.
30. மீண்டும் அத்வைதிகளின் கூக்குரல், 347.
31. கும்பகோணத்தில் மூன்று ஸ்வாமிகள், 349.
32. அறிக்கையும் விளம்பரமும். 29, 123, 188, 286, 318, 382.
33. செய்திகள் 62, 91, 121, 158, 186, 217, 251, 286, 317, 345.
34. மதிப்புரை. 64, 159,
35. அப்பய்யதீக்ஷிதரின் சொல் கண்டனம். 365.




## சந்தாதாரர்களுக்கு விக்ஞாபனம்.

ஸ்ரீ குரு ராகவேந்திரரின் அருளாலும் எமது மாத்வகுல மஹனீய சந்தாதாரர்களின் பேருதவியாலும் இம்மாத்வமித்திரன் ஏழுவருஷ காலமாய் யாதொரு விக்னமன்னியில் பிரதிமாதமும் தவறாமல் தனது சஞ்சிகையை வெளியாக்கிக்கொண்டு இந்த சஞ்சிகையுடன் தனது ஏழாவது வருடத்தை முடித்துக்கொள்கிறது என்று அறிவிக்க மிகவும் சந்தோஷப்படுகிறோம். எந்த ப்ரதிக்ஞையுடன் இப்பத்திரிகை துவக்கப்பட்டதோ அதை கூடுமான வரையில் நாளது வரையில் இப்பத்திரிகை நிறைவேற்றிக்கொண்டு வருவதை எல்லோரும் ஏகமனதாய் அங்கீகரித்திருக்கின்றனர். ஆயினும் சந்தாதார்களின் குறைவால் இப்பால் சில வருஷங்களாய் ஏற்பட்டிருக்கும் பணமொடையால் இப்பத்திரிகையை விருத்தியடையச்செய்யும் உபாயம் இல்லாமற்போய், பத்திரிகையை விடாமல் நடத்திவருவதே பெரும் ஸாகஸமாகுமோவென்று நினைக்க சந்தர்ப்பம் ஏற்பட்டு வருகிறது. நாம் பல தடவைகளில் அறிவித்திருக்கிறபடி இப்பத்திரிகை சந்தாதாரர்களின் சந்தாதுகை போஷணையால் தான் நடத்தப்பட்டு வருகிறது. மடாதிபதிகள் மிட்டாதாரர்கள் தனவந்தர்கள் தாராளநோக்கமுள்ள பிரபுக்கள் பலருக்கு இப்பத்திரிகையிடம் அளவிலா அன்பும் மிக்ககௌரவமும் இருப்பினும், இப்பத்திரிகையின் ப்ராணதாரணத்திற்கு மிக மிக அவசியமாயுள்ள எந்த இதர திரவியசகாயத்தையும் பெற இதுகாறும் இப்பத்திரிகைக்கு அதிர்ஷ்டம் ஏற்படவில்லை. "ஸஹிஸர்வ மனோ விருத்தி ப்ரேரகஸ்ஸமுதாஹ்ருத:" என்று பகவான் எந்த ஜனங்களை எவ்வாறு ப்ரேரிபித்து இப்பத்திரிகையை நடத்துவாரோ நாம் அறியோம். தேவதூதரான ஸ்ரீராகவேந்திரரின் ஆக்ஞையின்படி நாம் இக்காரியத்தை சிறிதும் மனது தளர்ச்சியடையாமல் நடத்தமுன் வருவதுதான் எமதுகடமை என்றெண்ணியிருக்கிறோம். இதற்கு வேண்டிய பொருளுதவி முதலியவைகளைத் தந்தருளுவது அவருடைய இச்சை. ஸ்ரீ பகவத்பாதாளின் அரியபெரிய நூலாகிய ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயத்தில் தற்போது சுமார் இருபத்திரண்டு அத்யாயங்களை முடித்தாய்விட்டது. எப்பாடுபட்டாவது பாக்கி சொற்பமாயுள்ள பத்து

அத்யாயங்களை முடித்து விட்டால் இம்மித்திரன் மாத்வ உலகத்திற்கு ஒருவாறு பெரும்சேவை செய்ததாகும். எமது சந்தாதாரர்களின் அன்பு குறையாமல் சிறிது விருத்தியடைந்தால் இதுவும் அசாத்தியமல்ல. ஆகவே அவர்களின் கூட்டுறவை நாம் அடிக்கடி பலவகையாய் நாடுகிறோம். தற்போது மாத்வ உலகில் மாத்வர்களின் பத்திரிகையாய் இம்மித்திரன் ஒன்றே பிரசாரத்திலிருந்து வருவதை எல்லோரும் நன்கு அறிவார்கள். ஆகவே ஸ்ரீ பகவத் பாதாளின் சேவை என்றெண்ணி இம்மித்திரனுக்கு ப்ராண தானம் செய்வதாயுள்ள தங்கள் சந்தா தொகையை எமது சந்தாதார நேயர்கள், வி. பி. மூலமாய் அனுப்பும் பணக்கஷ்டத்தையும் நஷ்டத்தையும் எங்களுக்கு கொடாமல், மணியார்டர் மூலமாக முன் பணமாக உடனே எங்களுக்கு அனுப்பி வைத்து இம்மித்திரனை ஆதரிக்கக் கோருகிறோம். அப்படி மணியார்டர் மூலமாக சந்தா தொகைகளை அனுப்பாத சந்தாதாரர்களுக்கு வழக்கப்படி அடுத்த சஞ்சிகை வி பி யில் அடுத்த பௌர்ணமி கழிந்த ஒரு வாரத்திற்குள் அனுப்பப்படும். அதைப் பெற்றுக்கொள்ளப்படாமல் திரும்பி வந்து ஏராளமான நஷ்டம் எமக்கு ஏற்படாதபடி, அந்த காலத்தில் சரியானபடி அதைப் பெற்று எமக்கு சந்தா தொகை வந்துசேர முன்னதாக ஏற்பாடு செய்யும்படி கோருகிறோம். 5, 6, 7 வால்யங்களின் பொருளடக்கம் இந்த சஞ்சிகையில் சேர்த்து வைக்கப்பட்டிருப்பதால் இந்த ஏழாவது வால்யத்தின் தவறிப்போயிருக்கும் சஞ்சிகைகளை இனமாய் அனுப்பப்படும். பழைய வால்யங்களின் சஞ்சிகைகளையும் பிரதிக்கு நாலணாவீதம் கிரயத்தொகையை அனுப்பிப்பெறலாம்.

208728
சென்னை 600 0..

## மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்.—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் பிந்தி ஏமாறாதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 0—8—0 தபாற் கூலி அணா 0—1—0.

ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரம்:— தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 தபாற்கூலி 0—0—6.

ஸ்ரீவாயுஸ்துதி:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

த்வைதமத விளக்கம்:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

கும்பகோண மகாத்மியம்:—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை 6.

துருவசரித்திர நாடகம்:— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

கீதாதத்வம்:—. ஸ்ரீ உத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதரங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1-8-0 தபாற்கூலி 0-6-0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்தொகை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப்படவேண்டும். *Certificate of Posting* பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

வருட சந்தா ரூ. 3 Regd. No M. 2419.


# டி. எஸ். ஆர்.
## அண்டு
# கம்பெனி,
## கும்பகோணம்.

ஸ்தாபிதம்
1909

தந்திவிலாஸம்
"கோகுல்"

எங்கள் வாஸனாதிரவியசாலையில்
தயாரித்து விற்பனைக்கு தயாராக
இருக்கும் ஸாமான்களின் விபரம்.

| | |
|---|---|
| வாஸனைப்பாக்கு | பலகாய்கறி ஊர்காய்கள் |
| வாஸனைச்சுண்ணாம்பு | ரோஜாப்பூ குல்கந்து |
| வாஸனைப் புகையிலை | ஷர்பத் தினுசுகள் |
| ஸ்னானப்பவுடர் | கொப்பரைச்சீவல் |
| கேஸர் பவுடர் | கோகுல் கூந்தல் |
| அம்பர், அரகஜா | பற்பொடி [தைலம் |
| தசாங்கம் | ஊதுவத்திகள் |

சந்தனாதித்தைலம்,
அரைக்கீரைவிதைத் தைலம்,
மற்றும் அநேகவாஸனை சாமான்களும் கிடைக்கும்
கேட்லாக்குக்கு எழுதுங்கள்


Printed at SRI VENKATESWAR PRINTING WORKS and
Published by Bhagavata Ranganathachariar, Kumbakonam.